1339

1339
2-55-

REGISTERED No. M. 6165. அணா 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - JUN 1955
MADRAS

ஜூன் 1955.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| இன்ஸானுக் கேற்றது இஸ்லாமே ... ... | 1 |
| குழந்தைகளோடு விளையாடும் கருணை நபி (சிறுவர் பகுதி) ரஹ்மத்பாகவி | 8 |
| இஸ்லாம் உய்ய வழி (மௌலவி எம். அஹ்மது மீரான், திட்டுவிளை) | 11 |
| கண் பார்வையை காப்பாற்றும் வழி (மாணவர் பகுதி) (டி. எப். ஆர். ம. ஆலி ஸாஹிப் பாகவி) ... | 15 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) ... ... | 19 |
| நன்னெறிகள் பற்றி நபிகள் பிரான் நவின்றுள்ளது (... எ. எஸ். அஹ்மத்மீரா சிறுடையபுரம்) | 23 |
| ... சர்ச்சில்" (முஹம்மது தாவூது) | 25 |

...இஸ்லாம் ஆபீஸ் :
...ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

5L
Q7ணா11, N29F1
N55
187043

# பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-8-0 |
| தனிப் பிரதி | அணா. | 0-2-0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2-0-0 |

எல்லா ஊர்களிலும் எஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


[ஹதீதுகள்]

## நபிநாயகத்தின் திருவாக்கியம்

மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு

(முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன. முதற் பாகம் 930 ஹதீதுகள் அமைந்தது. டிம்மி 1-8 ஸைஸில் 288 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு

விலை ரூ. 2—4—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ, 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்.

## ஜூன்—1955.

## இன்ஸானுக் கேற்றது இஸ்லாமே

'மனிதன் இயற்கையாக பிறக்கிறான்: இயற்கையாக வாழ்கிறான்: இயற்கையாக மரிக்கிறான்' என்று சொல்லப்படுவது சகஜம். அதாவது இயற்கை யென்று மனிதன் சொல்லிக் கொள்கிறானே அதென்ன வென்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

மனிதன் எப்படி பிறக்கிறான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் என்று கருதப்படுகிறது. உண்மையில் மனிதன் எப்படி பிறக்கிறான் என்பது எந்த மனிதனுக்கும் தெரியாது. ஆணும் பெண்ணும் கலந்து இன்புறுவதால் கர்ப்பம் தரிக்கிறது; பிறகு ஒன்பது பத்து மாதம் சென்று பிள்ளை பிறக்கிறதென்று எல்லோரும் தான் சொல்லுகிறார்கள். எத்தனையோ ஆணும் பெண்ணும் கலந்து வாழ்ந்து இன்பம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களால், ஒரு குழந்தையையும் தம் இஷ்டம் போல் கர்ப்பத்துக்குள் உற்பத்திச் செய்துகொள்வதற்கு முடிகிறதில்லை. இதற்கு காரணத்தை கண்டறிந்து சொல்லவும் அவர்களால் முடிவதில்லை.

பூமியில் விதை போட்டால் செடி முளைக்கிறது என்பது இயற்கை தான். இந்த வாதம் சொல்வதற்கு ருசிகரமாகத்தான் இருக்கிறது. ஆனால் எந்த பூமியில் எந்த விதையைப் போட்டால் முளைக்கும்; எந்த மண்ணில் எந்த விதை முளைக்காது என்பதைக் கண்டறிய வேண்டும். மணற் பாங்கான அரபு தேச மணற்காட்டில் நெல்லும் கரும்பும் விளையுமா? ரோஜாப்பூவும் மல்லிகை முல்லை மலர்களும் புஷ்பிக்குமா? அல்லது இனிய பழம் தரும் மாமரம் தான் முளைக்குமா? பலாமரம் விளையுமா? வாழைமரம் தான் கன்று விடுமா?

இதையும் இயற்கை என்று நாம் சொல்லி விடுகிறோம். இயற்கை என்றால் எல்லாம் ஒரேவிதமான விதிக்குட்பட்ட தல்ல. இயற்கை என்று எல்லாச் செயல்களையும் வரம்பு படுத்திவிட முடியாது. இயற்கை விதியே பல சமயம் இயற்கை விதிக்கு கட்டுப் படாமல் போய் விடுகிறது.

## இயற்கையை மீறியது தெய்வமாம்.

மனிதனுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் கட்டுப்படாமல் சில காரியங்கள் நடைபெறுவதுண்டு. இதைக் கண்டு மனிதன் திகைக் கவும் செய்கிறான்; பயப்படவும் செய்கிறான். அப்படிப்பட்ட சமயங்களில், அவன் 'தெய்வம்' என்ற ஒரு பரம சக்தியைக் கொண்டு வந்து நிறுத்துகிறான். அந்த சக்தியின் முன், மனிதன் பணிந்து மரியாதை செலுத்துகிறான்; அதைப் போற்றிப் புகழ்கிறான்.

இப்படிப்பட்ட பரம சக்தியை, முஸ்லிம்களாகிய நாம் 'அல் லாஹ்' என்று சொல்லுகிறோம். மற்ற மதத்தார்களும் இப்படிப் பட்ட சக்தியைப் பாராட்டுகிறார்கள். விதவிதமான குண விசே ஷங்களை அப்பரம சக்திக்கு கற்பனை செய்து, அதை பூஜிக்கவும் வணங்கவும் செய்கிறார்கள்.

இயற்கை என்று சொல்லும் போது செயற்கை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இயற்கையும் செயற்கையும் மனிதருடைய வாழ்க்கையில் மிக மிக நெருங்கிய சம்பந்தமுடையதாகும். ஒரு க்ஷணநேரமாவது மனிதன் இயற்கையை மீறியும் செயற்கையை மீறியும் உயிர் வாழ்வ தென்பது முடியாத காரியம்.

மனிதனுக்கு தினமும் பசி எடுக்கிறது; தாக முண்டாகிறது; இச்சை ஏற்படுகிறது. இஃதெல்லாம் இயற்கையாகும். பசி எடுத்தால் ஆகாரம் சாப்பிடுகிறான்; தாகமுண்டானால் தண்ணீர் குடிக்கிறான்; இச்சை யுண்டானால் இனத்தை நெருங்கி இன்பம் நுகர்கிறான். இதில் பசி என்பது இயற்கை; ஆகாரம் என்பது செயற்கை. இச்சை என்பது இயற்கை; இன்பம் என்பது செயற்கை.

இதே போல், உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு காரியத்தை யும் இயற்கை என்றோ செயற்கை என்றோ, சொல்லிக் கொண்டே போகலாம். இந்த இரண்டு வகையிலும் அடங்காமல் மிகைத்துப் போகும் தன்மையிடம் மனிதன் பணிந்து, அது தெய்வச் செயல்— அல்லாஹ்வுடைய குத்ரத் என்று மனதுக்கு ஆறுதல் சொல்லிக் கொள்கிறான்.

## எல்லாம் அல்லாஹ்வின் குத்ரத்தே

இயற்கைத் தன்மை, செயற்கைக் காரியம், தெய்வ சக்தி இம் மூன்றும் வெவ்வேறாய் கருதப்படாமல், இயற்கை தானே உண்டாய் விடுகிற தென்றும், செயற்கை மனிதன் தன் இச்சைப்படி செய்கிறான் என்றும், தெய்வ சக்தி எதிர்பாராத விதமாக நடைபெறுகிற தென்றும் ஒரு நியதி ஏற்படுத்திக் கொள்கிறார்கள் அறிவுடையோர். உண்மையில் எல்லாமே அல்லாஹ்வுடைய குத்ரத்தின் பிரகாரமே நடைபெறுகின்றன.

"வல்கத்ர கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா" (விதி வசமும் அதனாலுண்டாகும் நன்மையும், அதனால் ஏற்படும் தீமையும் யாவும் அல்லாஹ்வின் குத்ரத்தால் உண்டாகின்றவையேயாகும்) என்பது முஸ்லிம்களுடைய ஈமானுடைய ஓர் அம்சமாகும்.

மனிதன், பாடுபட்டு உழைத்து ஒரு பெரும் காரியத்தை சாதித்து விடப் பிரயத்தனப்படுகிறான். அவன் உழைப்பது செய்கை. இந்தச் செயற்கை வெற்றி பெற்று விட்டால் அதாவது காரிய சாதனை யாகி விட்டால், "இதோ பார், இது நான் செய்தது; இது என் சாமர்த்தியம்" என்று பெருமை யடைந்து திருப்தி யடைகிறான். அப்படி முயற்சித்தும் பாடுபட்டும் உழைத்தும் அந்தக் காரியம் நிறைவேறாமல், பயன் தராமல் போனால் மனம் சோர்ந்து விடுகிறான். "எல்லாம் தெய்வச் செயல்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்று சொல்லித் திருப்தி யடைகிறான்.

சிறு பிள்ளைகள், மரத்தில் கல்லை விட்டெறிந்து மாம் பழத்தை விழச் செய்கிறார்கள். சில பையன்களுடைய கல், குறிதவறாமல் பழத்தின் மீது பட்டு விழச் செய்கிறது. சில பையன்களின் குறி தவறிப் போய் விடுகிறது. குறி பார்த்து அடித்து பழத்தை விழச் செய்தவன் பெருமை பாராட்டிக் கொண்டு பழத்தை சுவைக்கிறான்; குறி தவறியவன் ஏமாற்ற மடைந்து, அந்தப் பையன் சுவைத்துப் பழம் சாப்பிடுவதைக் கண்டு ஏங்குகிறான். "டேய், எனக்குக் கொஞ்சம் கொடுக்க மாட்டாயா? நேற்று உனக்கு நான் தின்பண்டம் கொடுக்க வில்லையா?" என்று உறவு கொண்டாடுகிறான். இன்னொரு சிறு பையன், வெறுமனே தலை தூக்கி மாமரத்தைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறான்; திடீரென்று அவன் முன் ஒரு பழுத்த பழம் 'பொத்' என்று விழுகிறது. சட்டென்று அதை அந்தப் பையன் எடுத்துத் தின்று ஆனந்தவாரிதியில் மூழ்குகிறான்.

இந்த உதாரணத்தில் இயற்கை, செயற்கை, தெய்வச் செயல் எல்லாம் அடங்கி யிருக்கின்றன. உண்மையில் இந்த மூன்று வகைச் சம்பவங்களும் ஒரேவித தெய்வச் செயல் என்பதை, முஸ்லிம்கள்

இஸ்லாத்தின் கொள்கைப் பிரகாரம் கொள்ள வேண்டிய அகீதாவும் நிர்ணயமு மாகும்.

## இஸ்லாமிய சட்டதிட்ட கிரந்தம்

'மரத்தின் மீது கல்லை விட்டெறிந்தால் பழம் விழும்' என்பது ஒரு தத்துவம். பழம் வேண்டியவன் கல்லை விட்டெறிந்து தான் ஆக வேண்டும் என்பது ஒரு ஷரத்து. அப்படி கல்லை விட்டெறிந்தால் பழம் விழுந்தாலும் விழும், விழா விட்டாலும் வீணாய்ப் போகும் என்பது விதி விலக்கு.

தத்துவம், நிபந்தனை, விதி விலக்கு இதெல்லாம் மனிதனுக்கு தெரிந்திருக்க வேண்டும். தெரிந்திருந்தால், மனிதனுடைய வாழ்க்கையில் உண்டாகும் வெற்றி—தோல்விக்கும், வாழ்வு-தாழ்வுக்கும் காரணம் புரிந்து, மனதுக்குத் திருப்தி ஏற்படுகிறது. எனவே ஒருவன் தத்துவமும் நிபந்தனையும் விதி விலக்கும் தெரியாமல், கண்ணை மூடிக் கொண்டு, கண்டா கண்டபடி கல்லை விட்டெறிந்து விட்டு, ஒரு பயனும் இல்லாமல் ஏமாந்து மனம் நொந்துப் போவது அவனது அறியாமையையும் அவிவேகத் தன்மையையும் காட்டுகிறது.

இந்த உதாரணம் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு மிகமிகப் பொருத்தமானதாகும். "முஸ்லிம்களே, மூமின்களே! நீங்கள் இன்னின்ன காரியம் செய்யுங்கள்; இன்னின்ன காரியம் செய்யாதீர்கள். இன்ன காரியம் செய்தால், உங்களுக்கு இன்ன நன்மை (தவாபு) கிடைக்கும்; இன்ன செயலைச் செய்தால் உங்களுக்கு கஷ்டமும் துன்பமும் பின்னர் நேரிடும்" என்று இஸ்லாமிய ஷரீஅத்தின் கட்டளைப் புத்தகமாகிய குர்ஆன் வேதம், சட்டதிட்டங்களையும் தத்துவங்களையும் ஷரத்துக்களையும் விதிவிலக்குகளையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இயற்கைப் பிரகாரமும், செயற்கைப் பிரகாரமும் அல்லது தெய்வச் செயல் பிரகாரமும்—எவ்வகையிலும் மனிதன் ஒரு சட்டதிட்டப் பிரகாரம் நடந்தொழுகக் கடமைப்பட்டிருக்கிறான். அந்த சட்டதிட்ட ஒழுங்கை மீறி நடக்கும் மாந்தன், ஒருபோதும் மன நிம்மதி யடையவும் மாட்டான்; பிற்கால வாழ்வில் சுகம் பெறவும் மாட்டான்.

## நல் அமல்களே நல்ல சாதனம்.

நாளைக்கு சுகமாக இருக்க வேண்டு மென்று ஆசைப்படுகிறவன், இன்றைக்கே முயற்சித்து சாதனத்தை சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். பிற்கால வாழ்வில் சுகம் பெறவேண்டு மென்று நாடும்,

மாந்தன், கைகால்களில் பலமும் புத்தியில் தீக்ஷண்யமும் இருக்கும் இப்போதே, அதிகம் பாடுபட்டு உழைத்து உபாயம் செய்து, பணமும் செல்வமும் சொத்தும் பூஸ்திதியும் சம்பாதித்து வைத்துக் கொள்கிறான். பிற்கால வயோதிகப் பருவத்தில் தானும் சுகமாக வாழ்ந்து, தன் மனைவி மக்களையும் கவலையின்றி வாழ வழி செய்கின்றான்.

இங்கு, முதிய காலம் என்பது 'ஆகிரத்' என்னும் மறுலோக வாழ்வை குறிக்கும்; உழைக்கும் கால வாலிபப்பருவம் என்பது இவ்வுலக வாழ்நாளைக் குறிக்கும். துன்யாவில் நாம் புரியும் நல் அமல்களே ஆகிரத்தில் நமக்கு சுகசாதனமாக விளங்கி உதவும்.

"யாரேனு மொருவன் இகலோகத்தில் ஓர் அணுவத்துணை நன்மை செய்தாலும், மறுலோகத்தில் அதைக் கண்டு கொள்வான். யாரேனுமொருவன் ஓர் அணுவத்துணை தீமை செய்தாலும் அதையும் அவன் மறுலோகத்தில் கண்டு கொள்வான்" என்பது இஸ்லாமிய சட்டதிட்ட ஒழுக்கப் புத்தகமாகிய திருக்குர்ஆனின் ஒரு போதனை யாகும்.

இதன்படி நல் அமல் செய்யவேண்டியதும், தீய காரியங்களை விட்டும் ஒதுங்கி பேணிக்கொள்ள வேண்டியதும், பொதுவாக ஒவ்வொரு மாந்தன் மீதும், குறிப்பாக ஒவ்வொரு முஸ்லிம் மீது அத்தியந்தக் கடமையாகும்.

மாந்தன், இயற்கைப்படி பிறந்தாலும், இயற்கைப்படி வாழ்ந்தாலும், இயற்கைப்படி மரித்தாலும், அவன் இறைவனால் இயற்றப்பட்ட சட்டதிட்ட ஒழுங்கின் பிரகாரம் நடந்தே யாக வேண்டும். அந்த சட்டதிட்ட ஒழுங்கின் பிரகாரம் தான் இயற்கை—செயற்கை—தெய்வாதீனம் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இஸ்லாமிய சட்ட ஒழுங்குகளை எல்லாம், வல்ல இறைவன் நமக்கு அருள் புரிந்திருக்கிறான். இந்த சட்ட திட்ட ஒழுங்குகளை உலகம் உற்பத்தியான காலந்தொட்டு இதுகாறும், நம்மாந்தர் சமூகத்துக்கு அவ்வப்போது நபிமார்கள் மூலமும் ரஸுல்மார்கள் மூலமும் தீர்க்கதரிசிகள் மூலமும், தலைவர்கள் மூலமும், இறைவன் நமக்கு தூது அனுப்பி போதித்திருக்கின்றான்.

"இறைவனின் கட்டளையைபற்றி, மாந்தர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்படாத சமூகம் உலகில் தோன்றியதில்லை" என்பது எல்லாம் வல்ல இறைவனுடைய போதனை யாகும்.

எனவே, அதன் பிரகாரம் இந்தக் காலத்துக்காகவும் உலகம் முடியும் வரையிலுள்ள கடைசி காலத்துக்காகவும், சாஸ்வத வேத

நூலாக அனுப்பி வைக்கப்பட்டது பரிசுத்த குர்ஆன் வேதமாகும். இஸ்லாமியத் திருவேதமாகிய குர்ஆனில், எல்லாவித தர்ம நீதிகளும் வாழ்க்கைத் திட்டங்களும் போதிக்கப்பட்டிருக்கின்றன.

## இன்ஸானுக்கேற்றது இஸ்லாமே.

இயற்கைக்கும் செயற்கைக்கும் தெய்வாதீனத்துக்கும் பொருத்தமான சட்டதிட்ட நியதிகளெல்லாம், பரிசுத்த இஸ்லாமியத் திருவேதமாகிய திருக்குர்ஆனில் இனிது போதிக்கப்பட்டிருக்கின்றன. உலகம் உற்பத்தியானது முதல், உலகம் முடிந்து அழிந்துபோகும் வரைக்கும், என்னென்ன நிகழும் என்பதெல்லாம் பகிரங்கமாகவும் மறை பொருளாகவும் திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றன. மனிதன் குழந்தையாய் பிறந்தது முதல் அவன் மூப்படைந்து நரைத்துக் கிழமாகி செத்து மண்ணில் புதைக்கப்படும் வரையில் அவன் என்னென்ன செய்யவேண்டும், எக்தெந்த அமல்கள் புரிய வேண்டும் என்பதெல்லாம், திருக்குர்ஆனில் போதிக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; மனிதன் இறந்து மறைந்து போன பின், ஆன்ம உலகிலும் மறுமையிலும் அவனுக்கு என்னென்ன நிகழும் என்பதும் திருக்குர்ஆனில் போதிக்கப்பட்டிருக்கின்றன. உலக வாழ்வுக்கு வேண்டிய பொதுப்படையான சட்டதிட்டங்களும் ஒழுங்கு முறைகளும் குர்ஆனில் போதிக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, இயற்கையின்படி பார்த்தாலும், செயற்கையின்படி பார்த்தாலும், தெய்வாதீன அமைப்பில் பார்த்தாலும், பொதுப்படையாக மனித சமூகம் நடந்து கொள்ள வேண்டிய சகலவித தத்துவ போதனைகளும், அனுஷ்டானச் சட்டதிட்டங்களும் இஸ்லாமிய ஷரீஅத்தில், குறைவிலாது முழுக்க முழுக்க போதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே "இன்ஸானுக்கேற்றது இஸ்லாம்தான்" என்று ஒரே வார்த்தையில் கூறலாம்.

## இயற்கை மதம் இஸ்லாம் தான்

பரிசுத்த தீனுல் இஸ்லாம் மார்க்கம், மனித சுபாவத்துக்கேற்ற சிறந்த மார்க்கமாகும். இந்த கோட்பாட்டை பகுத்தறிவுக் கொத்த முறையிலும், ஆன்மார்த்த முறையிலும், அறிவாளிகள் எடுத்து உரைத்திருக்கிறார்கள்.

இக்காலே, இஸ்லாம் மதம் உலகமெல்லாம் பரவி வியாபித்திருப்பதைப்போல் வேறெந்த மதமும் விசாலமாய் வியாபித்துப் பரவியிருக்கவில்லை. புத்த மதம் உற்பத்தியான கிழக்கு நாடுகளிலும், கிறிஸ்து மதம் உற்பத்தியாகிப் பரவிய கீழ், மேற்கு நாடுகளிலும், யூத மதம் உற்பத்தி வியாபித்திருந்த தூரக்கிழக்கு நாடுகளிலும்,

ஆஸ்திகம் குன்றி நாஸ்திகம் தலை விரித்தாடிக் கொண்டிருந்த ரஷ்யா முதலிய தூரத் தேசங்களிலும், நவீன நாகரிகமும் நிரீஸ்வர வாதமும் விதண்டாவாதப் போக்கும் மலிந்த அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளிலெல்லாமும் இப்போது பரிசுத்த இஸ்லாம் மதம் பரவி வியாபித்துக் கொண்டு வருகிறது; பரிசுத்த குர்ஆன் ஷரீப் ஆங்கிலம், பிரான்ஸ், ஜெர்மனி, மற்றும் எல்லாப் பிற பாஷைகளி லும் மொழி பெயர்க்கப்பட்டு பரவி, பயன் அடைந்து வருகிறார்கள் மேனாட்டு பெரும் சமூகத்தார்.

இயற்கைத் தன்மையின் பிரகாரம், உலக மெங்கும் இயற்கை மதம் வியாபித்துத்தான் தீரும். எந்த மதம் மனிதனுடைய இயற்கை சுபாவத்துக்குப் பொருத்தமா யிருக்கிறதோ அதற்கே வியாபிக்கும் தன்மையும் இருக்கும். இன்று இத்தகைய பெருமை தீனுல் இஸ்லாத்துக்கே குறிப்பாய் இருந்து வருகிறது. இன்னும் கொஞ்ச காலத்தில், உலகமெங்கும் இஸ்லாம் மதமே பிரதான மார்க்கமாய் விளங்கினால், அதைக் கண்டு யாரும் வியப்படைய மாட்டார்கள்.

ஓங்குக இஸ்லாம்! அல்லாஹு அக்பர்!

---


## இரத்தின விலாசம்
## நஸீஹத்துலாசம்

அல்லாஹ், றஸூலைக்கொண்டு ஈமான் கொண்ட ஒவ் வொரு முஸ்லிமும் படித்தறிந்து அமல் செய்ய வேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்க ளாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளிலிருந்து திரட்டி எடுத்தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும் ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்து தீர வேண்டிய புத்தகம் தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும்.

சுத்தத் தமிழ் ரூ. 1–8–0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.




# குழந்தைகளோடு விளையாடும் கருணை நபி (ஸல்)

(ரஹ்மத் பாகவி)

லோக தயாளர் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், பெரியவர்களிடம் அன்பாயும் விசுவாசமாயும் சகோதரத்தன்மையோடும் நடந்து கொண்டதைவிட பன்மடங்கு, பரிசுத்த தூய உள்ளம் படைத்த குழந்தைகளிடம் மிகமிகக் கருணையோடு பழகி வந்தார்கள்.

லோக தயாளர் நபிகள் பெருமானார் (ஸல்) மானிட சிரேஷ்டராயும், முடிசூடா மன்னராயும், அரபு தேசத்துக்கே அதிபதியாயும் இருந்துங்கூட, சின்ன குழந்தைகளைக் கண்டால், லஜ்ஜையைவிட்டு, குழந்தைகளோடு தாமும் ஒரு குழந்தையாய் மாறி, கொஞ்சி விளையாடுவார்கள்.

அழுகிற குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டி அதனை சிரிக்கச் செய்வார்கள். குழந்தைகளின் கன்னத்தை கிள்ளி, தலைமேல் திருக் கரம் வைத்து உத்ஸாகப்படுத்துவார்கள்.

நாயகத் திருக்குமாரி பாத்திமா நாயகியாரின் இரு செல்வங்களான தம் அருமை பேரப்பிள்ளைகளை, மடிமீது வைத்துக்கொண்டு கொஞ்சி விளையாடுவார்கள். தோள் மீது தூக்கி வைத்துக் கொண்டு, குதித்து குதித்து நடப்பார்கள்.

ஒரு முறை நபிகள் நாயகம் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) தொழுது கொண்டிருந்தார்கள். அருகில் பேரக் குழந்தை (இமாம் ஹுஸைன்) விளையாடிக் கொண்டிருந்தது. நாயகம் (ஸல்) ஸஜ்தாவில் பணிந்து இருப்பதைக் கண்ட குழந்தை, குதூகலமடைந்து ஊர்ந்து வந்து, நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் முதுகின் மீது (குதிரைஏற்றம்போல்)ஏறி சவாரி செய்யலாயிற்று. எம்பெருமானார்(ஸல்) அவர்கள் குழந்தையின் சந்தோஷத்துக்கு பங்கம் வராத முறையில், கொஞ்ச நேரம் அப்படியே ஸஜ்தாவிலேயே இருந்து விட்டார்கள். விஷயம் தெரிந்து பாத்திமா நாயகியார் வந்து, குழந்தையை தூக்கிக் கொண்ட பிறகே ஸஜ்தாவி லிருந்து தலையை உயர்த்தினார்கள்.

'மிஷ்காத்' என்னும் ஹதீதுக் கிதாபிலுள்ள ஒரு ரிவாயத்து. "ஒரு முறை, ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், (வீட்டை யடுத்த) மஸ்ஜிதில் ஸஹாபாக்களுக்கு ஜமாஅத்தாக தொழ வைத்துக்கொண் டிருந்தார்கள். அப்போது, பீபி ஜைனபுடைய பெண் குழந்தை அமாமா, திரு நபியின் மடியில் இருந்தது. ஸஜ்தா செய்யும்போது குழந்தையை தரையில் விட்டுவிடுவார்கள். ஸஜ்தாவிலிருந்து சிரசை உயர்த்தியதும் மீண்டும் குழந்தையை தூக்கி மடியில் (இடுப்பில்) வைத்துக் கொள்வார்கள்" என்பதாகும்.

என்னே, நந்நபி (ஸல்) அவர்களின் அன்பும் அருளும் கருணையும்!

"ஸல்லல்லாஹு அலா முஹம்மத், ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்"

---


## வீரத்துல் பாறூக்

இதாகிறது நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலிபாவாகிய உமர் இப்னுல் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமார்த்தியங்களும், தீனில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கி யிருக்கின்றன. எல்லா முஸ்லிம் களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் நாமதை இங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை. இது இரண்டுபாகமாகும். முதற் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும் இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டு பாகமும் சேர்ந்தது விலை ரூ. 3

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ.20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களின்மகனூர்

# முஹம்மது ஹனீபா யுத்தசரித்திரம்

இதில் ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா அவர்களின் தாயாராகிய ஹனீபா பீவியுடன் அலி யலியல்லாஹு அன்ஹு அவர்கள் யுத்தஞ் செய்து ஜெயித்து, அவர்களை நிக்காஹ் செய்து விட்டுப் போனதும், பிறகு ஹஸ்ரத் முஹம்மது ஹனீபா பிறந்து தாயிடம் வளர்ந்து தமது பிதாவாகிய அலி றலியல்லாஹு அன்ஹுவைத் தேடிச் சென்று பிதாவென்று அறியாமல் யுத்தம் புரிந்ததும், பிறகு ஹஸ்ரத முஹம்மது ஹனீபா அவர்கள் பூத தேவுகளுடன் யுத்தம் புரிந்து பீவி ஸைனுல் அறபை விவாகம் செய்ததும், ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை எஸிது என்பவன் ஷஹீது செய்து, ஹஸ்ரத் இமாம் ஸைனுல் ஆபிதீன் அவர்களையும் ஹஸ்ரத் நபிநாயகம் அவர்களின் வீட்டாரையும் சிறையிட்ட விஷயமாகத் தாங்கள் புறப்பட்டு போகும்போது உமர் அலி, தாலிப் அலி, ஆகில் அலி, முஸிப்காகான், இப்றுஹீம் உஷ்த்து, தோஹான் மோஹான் முதலிய பிரக்யாதி பெற்ற வீரர்களோடு மதீனமா நகரஞ் சென்று உத்பா வலீது என்பவர்களுடனும், மற்வானுடனும் எஸீதுடனும் பல ஊர்களில் பலவிதமாய் மகா வீரியத்துடன் அதிசயிக்கத் தக்க விதமாய் யுத்தஞ் செய்து எஸீதுடைய படைகளை முறிய அடித்தும் ஜெயித்தும், மார்வானுடைய மூக்கையும் காதையும், அறுத்தும் ஹுஸைன் றலியல்லாஹுடைய பழிக்கு பதில் பழிவாங்கி சிறையை மீட்டியதும், ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதின் அவர்களைப் பட்டத்தில் உட்காரவைத்ததும், எல்லா அரசாங்கத்தையும் தங்களுக்குள்ளடக்கி ஆண்டதுமான எல்லா விஷயங்களும் மிக அருமையாயும் தெளிவாயும், எழுதப்பட்டிருக்கிறது.

புதிய பதிப்பு கலிகோ பைண்டு ரூ. 3

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# இஸ்லாம் உய்யவழி

(மௌலவி எம். அஹ்மது மீரான், திட்டு விளை.)

என் சமூகம் சீரழி(ந்து, நிலை குலை) யுமிடத்து எவர்
எம் பாதையைப் பற்றிப் பிடிக்கின்றாரோ அவருக்கு
எல்லாம் வல்ல அல்லா(ஹு)வுக்காக தம்முயிரை அற்பணித்து
என்றும் அமரத்துவ மெய்திய ஆயிரம் அடியார்களின் கூலியுண்டு
நபி (ஸல்) பொன் மொழி.

தார்மீக எல்லைக்குட்பட்டு வாழும் இஸ்லாமியர்களாகிய நாம் முஸ்லிமென்ற புனிதப் பெயர் தாங்கி நிற்கும் நாம் திருகுர்ஆனை வேத கிரந்தமாகக் கொண்ட நாம் (இறுதி நபியாகிய) முஹம்மது (ஸல்) அவர்களை இறைவனின் திருத்தூதராகக் கொண்ட நாம் சுருங்கக்கூறு மிடத்து லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்ற கலிமாவை மூல மந்திரமாக கொண்ட நாம், முதலில் அன்றைய உலக நிலைமையையும், குறிப்பாக அரேபியரின் காட்டுமிராண்டி தன்மையையும் அவர்களைச் செம்மைப் படுத்த நபி (ஸல்) அவர்கள் கடைபிடித்த உயிரினுமரிய தியாகத்தையும் அவற்றின் சித்திரங்களையும் நம் முன் உருவகப்படுத்தி உற்று நோக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நெடுநிலமெங்கும் காரிருள் கவிந்திருந்தது, மாந்தரிடையே துன் மார்க்கம் மலிந்துக்கிடந்தது, பஞ்சமா பாதகங்கள் பொலிந்திருந்தன, பாவங்களின் நமூனா எதுவும் நம்முன் இன்றைய உலகில் மறந்தோ, மறைந்தோ யிருப்பின் அன்றைய அரேபிய வாழ்துகூஷணரின் சரித்திரப்படலங்கள் அவற்றை தெற்றென புலப்படுத்து பவயாயமைந் திருந்தன. மார்க்க நெறி பெயருக்குங்கூட இம்மியும் காணமுடியாத அம்மூர்க்கரின் மத்தியிலே எமக்கெல்லாம் ஷபாஅத் செய்யும் முஹம் மது (ஸல்) அவர்கள் இருளை யகற்றும் தீபமாய், குறைஷிக்குல விளக்காய், நபிகட்திலகமாய் பார் புகழும் ஏந்தலாய், நானிலம் மிளிரும் றஹ்மத்தா யுதித்தனர். இறைவனால் தமக்குக் கிடைக்கப்பெற்ற ஞானோதய அருளையும் வஹீமூலமாய்க் கிடைக்கப்பெற்ற நீதிவசனங் களையுமே அடிப்படையாய்க் கொண்டு செயல்பட ஆரம்பித்தார்கள். அது காலை அவர்கள் எதிர்த்துப்போராடிய சொல்லற் கரிய இடுக்கண் களை இங்கு கொண்டுவர தலையங்கம் அனுமதிக்கவில்லை. இறைவனின் வழிப்பாட்டிற்கும் அத்துடன் கூடிய மானிடப் பண்புக்கும் உரமூட்டு வதையே லக்ஷியமாகக் கொண்டதால் சகிக்கொணாதுயரம் தாங்க நேரிட் டபோதிலும் மனம் சடைந்தார்களில்லை. அறிவு நலிந்த மாக்களின் குணம் மலிந்த மக்காவாசிகளின் மத்தியில் சதா தெய்வ பக்தியின்

அவசியத்தையும், அவன் ஏகனென்ற தத்துவத்தையும் பரத்தவே முயன்றார்கள்.

மனிதன் மனிதனாய் வாழ்ந்து மானுஷீகப்பண்பின் அரங்கிலே இடம்பிடிக்க வழியெது உண்டோ அவைகளை ஏக தெய்வ வணக்கத்தின் கீழ் உபதேசித்தார்கள். மூர்க்கரை முறியடித்து முற்போக்குக்குரிய பாதையைக் காண்பிக்க, தன் சிறிய எண்ணிக்கையுடைய சகாக்களுடன் பிரசாரம் புரிந்த காலை தற்காப்புக்காக எதிர்த்துப் போராட வேண்டிய புரக்ஷிகர நிலை ஏற்பட்டது. எனினும் மானிட க்ஷேமத்தையும், நேரிய மார்க்கத்தையுமே குறியாகக் கொண்ட எம்பெருமானார் எதிரிகளால் எல்லையற்ற முறையில் தொல்லைக்குட்படுத்தப்பட்ட போதிலும், ஏன்......பாதகர்களின் ஆயுத முனையில் தன் உதிரம் பீறிட்டு ஒலிக்க நேர்ந்தபோதிலும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க்கத்தின் தத்துவப்பிரவாகம் வையகந்தனிலே வழிந்தோடுவதிலேயே தன் முழுச்சிந்தையை யோட்டினார்கள்.

என்னே! வள்ளலின் தியாகம்
என்னே!! வீரரின் வேகம்
என்னே!!! (திருத்) தூதரின் ஊக்கம்

பெருவாரியான வைரிகளின் முன்னே விரல் விட்டு எண்ணத்தக்க நபியின் சிறியதோர் ஜதாஜிஹாத் செய்ததின் விளைவால் இன்றைய நாகரீக வுலகில் அல்லாஹு அக்பர் என்ற கோஷம் கிளம்பாத இடமே இல்லாத நிலையில் மார்க்கம் மிளிர்ந்து விட்டது. இது உலகப் பிரசித்திப்பெற்ற சரித்திரத்திலேயே முதலிடம் பெறவல்லது என்பதை மறுப்பார் எவருமிலர். பெருமானாருக்குப்பின் ஸஹாபாக்களும் அவர் கட்குப் பின்னால் ஏனையோரும் இவ்வாக்கப்பணியில் மனமுனைந்து செயல் படவாரம்பித்தனர். வெற்றியும் கண்டனர். பெருமானாரின் உதிரத்தால் வாழ்விக்கப்பட்ட புண்ணிய தர்மம் வீழ்ச்சியிலும் நிலை ஏற்பட்ட இக்காலை பெருமானாரின் உம்மத் என்ற பட்டம் தாங்கி நிற்கும் ஒவ்வொரு இஸ்லாமியனுக்கும், குறிப்பாக இஸ்லாமியோதிரம் ஒலித்தோடும் வாலிபர்கட்கும், ஞானத்தைப் புகட்டக்கடமைப்பட்ட ஆலிம்களுக்கும் எதிர்கால உச்சநிலையை நிர்ணயிக்கும் நோக்கத்துடன் கல்விபயிலும் மாணவர்கட்கும் இறையருளால் குவித்து வைத்திருக்கும் தனவந்தர்கட்கும், மற்றோருக்கும் மதத்தின் பெயராலெழும் ஆதாரங்களுக்குத் தலைசாய்த்து மதப்பணியிலீடுபடும் பொறுப்புண்டு என்பதை மறந்துவிடலாகாது. இதில் பலன் யாது? என்பதை தலையிலே கொடுக்கப்பட்டிருக்கும் பொன்மொழி எண்பித்துக் காட்டுகிறது. மதவளர்ச்சிக்காக நபிபெருமானார் அவர்கள் இரத்தம் சிந்தினார்கள் என்றால் நாம் வியர்வையையேனும் அவ்வளர்ச்சிக்காக சிந்துவதில்லை. கூரிய அம்புகளுக்கு நபி (ஸல்) அவர்கள் இலக்கா

ஞர்கள் என்ருல் நாம் வசையம்புக்கு இலாக்காகுவதில்லே. தாய் நாட்டையும் சொத்தையும் நபியவர்கள் இழந்தார்கள் என்ருல் நாம் அவ்விரண்டையும்சில தினங்களுக்குக்கூட விட்டுப் பிரிகின்ருேமில்லே. நாமா துணையெதுவும் கிடைக்க முடியாத மறுஉலக மைதானத்தில் அன்னபியவர்களின் ஷபாஅத்தை எதிர்ப்பார்க்கும் உம்மத்!

விதைத்து நீரூற்றி மரத்தை வளர்க்கமுடியாவிட்டாலும் வளர்ந்து வரும் மரத்தை பாதுகாத்து அதன் கனியை புசித்து ருசிக்கும் மதியை யாவது வளர்க்கலாகாதா. "வணக்கத்திற்குரியவன் அல்லா(ஹுத)வைத் தவிர வேறு யாருமில்லே. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லா(ஹுத) வின் திருத்தூதராயிருக்கும்" என்ற முதல் மந்திரத்தை ஒப்பமுடன் செப்பிய ஒவ்வொரு முஸ்லிமும் இறைவன் வசனத்திற்கு முழுக்க முழுக்க தலேசாய்த்து அத்துடன் பெருமானுர் வகுத்துதந்த பாதை வழியே செல்வதுடன் அவர்கள் பொறுப்பேற்ற நடத்திய விஷயங் களில் பங்கு கொண்டா லொழிய முதற்றா முஸ்லிமாக முடியாது என்பது ஆதாரத்திற்குட்பட்ட உண்மையாகும்.

ஆகவே ஒவ்வொரு இடங்களிலும் சன்மார்க்கச் சங்கங்கள் நிறுவப்பட்டு மார்க்க போதனேகளே உற்ருருக்கும் மற்ருேருக்கும் கடமை என்ற முறையில் எடுத்துக்காட்டு முன்பு நம்செயலே பண் படுத்தியாக வேண்டும். ஏனேய சமயங்களேவிட தனிக்கலாச்சாரம், கட்டுப்பாடு ஒழுங்கு மற்றய கட்டுக் கோப்புகள் யாவும் ஒருங்கே சேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட நம் புனித மார்க்க எல்லேயைக் கடந்து அனுச்சார உள்ளுருவமெடுத்து நானிலத்தில் மலிந்து கிடக்கும் நாக ரீகத்தின் முன் மண்டியிடுகின்ருேமே! என்ன இழி நிலே அனுச்சார அட்டுழியத்தின் முன் தாசப் பணிபுரியும் இந்த நம் பேர்வழிகளே நம் சமயத்தினரை, நம் தோழரை பிடித்து இழுத்து, மயக்கம் தெளிய வைத்து மானிட கோடிகளின் உயர்வுக்கு அடிகோலும், இடியோசை போல மக்களின் காதுகளில் எக்காளமிடும் திருகுர்ஆனின் போதனே களின் முன் நிறுத்தலாகாதா! இத்தகைய வாலிபர்களில்லேயா? இஸ்லா மிய ஆக்கப்பணியில் ஊக்கம் காட்டும் வல்லுணர்களோ, கலேஞர்களோ இல்லேயா?

வீரம் செறிந்த இஸ்லாமியத் தோழர்கள் தங்கள் திறமையால், தங் களின் இயற்கையான வீர உணர்ச்சியால் தன்னேயும், தன் சுற்றத்தாரை யும் ஏனேயோரையும் கூடுவிட்டு கூடுபாயாத சுய இயல்பை, உயரிய கோட்ப்பாடுகளால் புனேக்கப்பட்ட சட்ட வேலேயைத் தாண்டக்கூடாத நன்னெறியை தத்தம் உள்ளத்தில் பசுமரத்தாணிபோன்று பதியச் செய்வதுடன், பதிந்த தத்துவங்களே அனுஷ்டான ரீதியில் பிரதிபலிக் கச் செய்யவும் முன்வந்தாலொழிய நம் மார்க்கச்சுடர் உலக அரங்கில் ஒளி வீசமுடியாது.

இத்தகைய உயர் குணங்களை நடைமுறையில் கண்டுகளிக்கும் பாக்கியத்தை அண்மையிலே அருளாயோ! இறைவா!! வாலிபர்கள் தங்கள் முழுசக்தியையும், மாணவர்கள் தங்கள் முழு கல்வித்திறமையையும் அல்லது அதில் சிறிய அளவையேனும் இஸ்லாமிய பண்பாட்டிற்கு ஒதுக்கவேண்டியிருக்க இவர்களை பிறரின் ஆசாரத்தையும், கொள்கையையும் கவ்விப்பிடித்துக் கொண்டிருக்கிறார்களே! இது நேர்மைதானா, நீதிதானாவென்பதை அவர்களே யூகித்துப் பார்க்கட்டும். ஒரு முஸ்லிம் அல்லல்படும்போது பல்லாயிரம் மைலுக்கு அப்பால் வதியும் மற்றோர் முஸ்லிமுக்கு அதின் சூடுதாவுகிறது என்று பிறசமூகத்தினர் கூறுகின்றார்களே ஏன்? நாமும் நாக்கூசாது பறைசாற்றுகின்றோமே ஆனால் முஸ்லிமை முஸ்லிமாக்கிவித்த தீன் பயிர் அல்லல் படும்போது வாடி வதங்கும்போது அதற்கு நீர் வார்த்து வளர்க்கும் ஊக்கம் அதைப் பாதுகாக்கும் உணர்ச்சி நம்மிலே இல்லை. பின் வாய் வேதாந்தம் எங்ஙனம் நன்மை பயக்க முடியும். ஆடு மாடுகளைப்போல் பன்னாட்கள் வாழ்வதைக்காண சிங்கங்கள்போல சின்னாட்கள் வாழ்தலே மிகச் சிறந்தது எனற ஓர் அரசியல் மேதையின் மொழிக்கொப்ப மார்க்க எல்லையை மீறி பல வருஷங்களை மிருகங்களைப்போல கழிப்பதைவிட மார்க்க எல்லையில் நின்று இறைவனுக்காக சில நாட்கள் வாழ்வதே சாலச் சிறந்தது.

உயிர் வாழும் ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் மத சித்தாந்தங்களை முழுக்க முழுக்க விளங்கி மாநிலத்தில் பரத்த முற்படுகிறார்கள். ஆனால் நம் மாணவர்களோ மதவிஷயங்கள் யாவையும் பிறருக்கு விளக்க முற்படாவிட்டாலும் தங்களுக்கென விளங்கிக்கொள்ளவும் அக்கறை எடுப்பதில்லை. பின்பன்றோ மக்களைத் திருத்தும் பணியிலிறங்க வேண்டும். இஸ்லாமிய மரபில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் முதலில் மத விஷயங்களையும், திருகுர்ஆனையும், ஹதீதையும் நன்கு பயின்று அவற்றிற்கு முதலிடங் கொடுத்து அருள் கலந்த கல்வியாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

பெற்றோர்கள் தங்களின் நலனையும் மக்களின் நலனையும் கருத்திற்கொண்டு மதபோதனைகளை மக்கள் ஏற்றுக்கொள்ள வழிகாண வேண்டும் இன்றேல் நிச்சயமாக நம்மை எதிர் நோக்கவிருக்கும் பிரளய காலத்தில் தங்களுக்கும் குமாரர்களுக்கும் தீங்கிழைத்தவர்களாய்த் திகழ்வர். அத்தகைய தீங்கு நம்மை யணுகாத முறையில் நேர்மையும் உண்மை உணர்ச்சியுமுள்ள இதயத்தை அல்லாஹ் நம்மவர்கட்குத் தந்தருள்வானாக ஆமீன்.

# கண் பார்வையை காப்பாற்றும் வழி

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் படிக்கும் மாணவர்கள், இளம் பருவத்திலேயே கண்பார்வை சரியாகத் தெரியவில்லையே என்ற குறை பாடு உடையவர்களாய் இருந்து வருகின்றனர். ஆரம்பத்தில் இவர் களுக்கு இந்தக் குறை சர்வசாதாரணமாக இருந்துவந்தபோதிலும், போகப் போக, கண்ணொளி மங்கி மங்கி கரும்பலகையில் (போர்டில்) உபாத்தியாயர் எழுதும் வெள்ளை எழுத்துக்களைக் கூட படிக்கமுடியாத வர்களாய் விடுகின்றனர்.

இதுமட்டுமல்ல. கண்ணுக்கும் மூளைக்கும் அவர்கள் அதிகமாக வேலை கொடுத்து வருவதால், அடிக்கடி தலைவலியும் கண்வலியும் கண் எரிச்சலும் உண்டாகின்றன. தலைவலி சில சமயங்களில் பொறுக்க முடியாமலாகி, கண் டாக்டர்களிடம் சிகிச்சைக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

டாக்டர்கள் கண்ணை பரீக்ஷித்து விட்டு, கண்ணாடி போட்டுக் கொள்ளும்படி ஆலோசனை கூறிவிடுகின்றனர். எனவே, 16, 18, 20 வயது வாலிபப் பிள்ளைகள், தடித்த மூக்குக்கண்ணாடிகளை மாட்டிக் கொண்டு, நாகரிகமென அதை நினைத்துக் கொண்டு படிக்கப்போவது பரிதாபகரமான காக்ஷியாக இருக்கிறது.

பணம் செலவிட்டு கண்ணாடி போட்டுக் கொண்டதால் மட்டும் அவர்களுடைய நேத்திரக்கஷ்டம் போய் விடுகிறதா? இல்லை. தலைவலி போய் திருகுவலி வந்த கதைப்போல், கண்ணாடிபழக்கம் மகா முக்கிய மாகி கண்ணாடியின்றி, வெள்ளைத்துணியா கருப்புத்துணியா என்று கூட வித்தியாசம் தெரியாமல், கண்ணாடி எதிரில் இருந்தும் அது எங்கே என்று தேடியலையும் நிலைமைக்கு வந்து விடுகிறார்கள்.

## பரிகாரம் தேடுவோம்

பள்ளிக்கூட காலேஜ் படிப்புப் பிள்ளைகளின் கண்பார்வை கெட்டுப்போகும் பழக்கம் இந்தியாவில் மட்டும்தான் இருக்கிற தென்று கருதவேண்டாம். ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் இந்த நேத்திர உபத்திரம் மிக மிக அதிகமாம். முதலில் ஜெர்மன் டாக்டர்கள் கூடி, இம்மாதிரி பள்ளி மாணவர்களுடைய கண்பார்வை நாளுக்குநாள் கெட்டுக்கொண்டு போகிறதே, இதை எப்படி நிவாரணம் செய்வ தென்று, பலவகைகளில் பரிகாரம் தேடலானார்கள். அதற்காக அநேக அனுஷ்டான திட்டங்களை தயார் செய்தார்கள்.

அதில் ஒன்று, பள்ளிக்கூட காலேஜ்களில் படித்தற்குரிய பாட புத்தகங்களை பெரிய (கொட்டை) எழுத்துக்களில் அச்சிட்டு வெளிப்

படுத்தும்படி, எல்லாப் புத்தக வியாபாரிகளுக்கு ஒரு உத்தரவுபோட்டு விடலாமா என்று முதலில் யோசித்தார்கள். இன்னொன்று, பிள்ளைகள் படிக்கும் வகுபபுக்களில் வெளிச்சத்தை அதிகமாகப்போட்டு பிரகாசிக்கச் செய்யலாமா வென்றும் யோசித்தார்கள்.

மற்றொரு டாக்டர் ஒரு புது யோசனை சொன்னார். அதாவது:— பிள்ளைகள் புஸ்தகத்தை வைததுப் படிக்கிறார்களே அந்த மேஜையின் உயரம் எவ்வளவு இருக்கவேண்டும்; கண்ணுக்கும் படிக்கும் புத்தகத்துக்கு மிடையில் எத்தனை அங்குலம் வித்தியாசம் இருக்கவேண்டும்; அல்லது புஸ்தகத்தை கையில் எடுத்துப் படித்தால், எப்படிப் பிடிக்க வேண்டும், எப்படி பார்க்கவேண்டும்? உட்காரும் மேஜை நாற்காலிகளின் அமைப்பையே மாற்றி அமைக்கலாமா என்றெல்லாம் ஆலோசனைகள் கூறினார்.

இதேவிதமாக, மற்றதேசத்து டாக்டர்களும் போதகாசிரியர்களும் கூடிக்கூடி, மாணவர்களின் கண்பார்வை மங்கிப் போகாதபடி எப்படி பாதுகாப்பது என்று மந்திராலோசனைகள் பல புரிந்து, தங்கள் அபிப்பிராயங்களை உலக டாக்டர்களின் ஆலோசனை மன்றத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

## அமெரிக்காவிலும் கண் கவலை

அமெரிக்காவில், கண் வைத்திய ஆராய்ச்சியில், டாச்டர் பேட்ரிஸ் என்பவர் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவராம். அவர், இந்த 'மாணுக்கர் கண்பார்வை பிரச்சனை'யைப் பற்றி மிகவும் கவலை எடுத்துக்கொண்டு, மிகப் பெரும் ஆராய்ச்சி யெல்லாம் செய்து, அநேக நல்லயோசனைகளை யெல்லாம் கூறினாராம். அதன் பிரகாரம் அநேகர் அனுஷ்டித்தும் பார்த்தனர். ஒரு சிலருக்குப் பிரயோஜனமும் ஏற்பட்டது. சில காலேஜ் மாணுக்கர்கள் அந்தப் பெரிய டாக்டருடைய ஆலோசனையின் படி நடந்து கொண்டதால், ஏற்கெனவே உபயோகித்து வந்த கண்ணாடிகளையும் கழற்றி தூர எறிந்து விட்டார்களாம். அநேகருக்கு வழக்கமாய் ஏற்பட்டிருந்து வந்த தலைவலி, மூளைக்குழப்பம், முதலிய தொந்தரவுகளும் போய்விட்டனவாம்.

## டாக்டரின் யோசனைகள்

அமெரிக்க கண் டாக்டர் மிஸ்டர் பேட்ரிஸ் கூறிய ஆலோசனைகளில் சில முக்கியமானவற்றை, இங்கு வாசகர்களுக்கு எடுத்துரைக்கிறேன். அனுஷ்டித்துப்பாருங்கள். பயன் ஏற்பட்டாலும் ஏற்படலாம்:

(1) தூரத்தில் இருக்கும் பொருட்களை, அதிக நேரம் சிரத்தையாக கூர்ந்து முறைத்து பார்க்கக்கூடாது. அப்படி உறுத்து நெடுநேரம் பார்த்தால், கண் திருஷ்டி பலஹீனமடைந்து விடுகிறது. கண் விழிகளுக்குள் வலியும் ஏற்படுகிறது.

இன்னும் புஸ்தகம், பூகோளப் படம், சித்திரம் முதலியவைகளையும் கண்விழிப்பிதுங்க, கூர்ந்து வெகு நேரம் நோக்கக்கூடாது. உதாரணமாக, உலக பூகோளப் படத்தில் இந்தியாவில் ஆக்ரா நகரம் எங்கே இருக்கிறதென்று கூர்ந்து நோக்கி ஆராய்வது முதலில் சிரமமான காரியமே. ஒரு தரம் கண்டுபிடித்து, 'மார்க்' செய்து வைத்துக்கொண்டால், மறுநாள் பார்த்து தேடி எடுக்கும்போது கண்ணுக்கு கஷ்டம் ஏற்படாது. இதே விதமாகவே, தூரத்தில் தெரியும் மரமோ கட்டிடமோ எத்தகையது என்று கண்டாராயும் போது, முதலில் கஷ்டம் ஏற்படும். அப்புறம் அவ்வளவு கஷ்டப்பட்டு பார்க்க வேண்டியதில்லை. ஒரு பார்வை பார்த்தவுடன், இது இன்னமரம், இது இன்ன பில்டிங் என்று சொல்லிவிடலாம்.

(2) சுவரில் மாட்டப்பட்டிருக்கும் சார்ட் என்னும் பெரிய எழுத்து அட்டைப் படத்தை, ஆராயும் கண் கொண்டு பார்வையிட வேண்டும். அதாவது பெரிய எழுத்துக்களை பார்த்துப் படிக்கும் வழக்கத்தை, தினமும் சிறிது சிறிது நேரம் அனுஷ்டித்து வந்தால், கண் பார்வையின் கோளாறு கொஞ்ச கொஞ்சமாக குறை தீக்ஷண்யம் உண்டாகும்.

(3) அதிக நேரம் எழுதியதால், தலைவலி ஏற்பட்டு விட்டால், எழுதுவதை நிறுத்திவிட்டு, சிறிய எழுத்துகள் அச்சிடப்பட்டுள்ள சார்ட்டை (எழுத்துப் பலகையை) சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். இதனால் தலைவலியில் கொஞ்சம் பரிகாரம் ஏற்படலாம்.

(4) ஓயாமல், பல மணி நேரம் எழுத்தையே பார்த்துக்கொண்டிருக்க நேரிட்டால், இடையிடையே படிப்பதையும் எழுதுவதையும் நிறுத்தி விட்டு, பச்சை செடிகளையும் அழகிய புஷ்பங்களையும் இயற்கை எழில் காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இதனால் ஓய்வு கிடைக்கலாம்.

(படிக்கும் இடத்தை விட்டு அடிக்கடி வெளியே வர முடியாத நிலைமையாக இருந்தால், புஸ்தகத்தையே பார்த்துக்கொண்டிருப்பதை விட்டு, சிறிது நேரம் இடையிடையே, சுவரில் மாட்டப்பட்டிருக்கும் சார்ட் பெரிய எழுத்துக்களையோ படங்களையோ பார்த்து, சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம்.)

(5) இரண்டு கண்களைக் கொண்டு ஒரு பொருளையோ புத்தகத்தையோ நெடுநேரம் பார்க்க வேண்டியதிருந்தால், முதலில் வலது கண்ணை மூடிக்கொண்டு இடது கண்ணால் பார்க்கவேண்டும். பிறகு இடது கண்ணை மூடிக்கொண்டு வலது கண்ணால் பார்க்கவேண்டும். இப்படியும் கண்களுக்கு ஓய்வும் சௌகரியமும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(6) கண்ணுக்கு எரிச்சல் ஏற்பட்டால், அல்லது நீர்கசிந்தால், கண்களை சிறிது நேரம் மூடி மூடித் திறக்க வேண்டும். அடிக்கடி கண் நிமைகளை அசைத்து அசைத்துப் பார்ப்பதோ, படிப்பதோ நல்லது. விழித்த விழி அசையாமல் எழுத்துக்களை முறைத்துப் பார்ப்பது கூடாது. மூடிமூடித் திறப்பது நல்லது.

(7) படிக்கும் புஸ்தகத்தை முகத்துக்கு நேராக உயர்த்தி வைத்துக்கொள்ளக் கூடாது; புத்தகம் கீழே தாழ்ந்தும், கண் பார்வை மேலிருந்து சற்று கீழே நோக்கிய வண்ணமும் இருக்கவேண்டும்.

(8) கண்ணில் எரிச்சல் இருந்தால், கண்ணுக்கு ஓய்வு வேண்டினால் குளிர்ந்த நீரால் கண்களை கழுவவேண்டும். அல்லது, தட்டைப் பீங்கானில் தண்ணீர்விட்டு அதில் குனிந்து, கண்களை மட்டும் நீரில் மூழ்கவைத்து சிறிது மூடிமூடித் திறக்கவேண்டும். இதனால் கண்கள் கழுவப் பட்டு அழுக்கும் தூசும் நீங்கும்.

(9) இன்னொரு முறை: ஒவ்வொரு பத்து நிமிஷமும் படித்தபின் கண்ணை மூடிக்கொண்டு, ஒரு நிமிஷம் மௌனம் சாதிக்கவேண்டும்; தியானிக்க வேண்டும்.

(10) இறுதியாக, தூங்கும்போது கண்ணுக்கு சுர்மா முதலிய நல்ல அஞ்சனம் தீட்டிக்கொள்ளலாம். எள்ளுப்பூவை வாயில்போட்டுக் கொள்வதும், நந்தியா வட்டம் என்னும் புஷ்பத்தை கண்களில் ஒத்திக் கொள்வதும் கண்களுக்கு குளிர்ச்சி தரும்.

---


## ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் ஜீவிய சரிதை

இதில் ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்களின் பிறப்பும் குழந்தை பருவமும், அவர்கள் மௌலானா ரூம் அவர்களை சந்தித்ததும், இருவர்களுக்கு முள்ள சம்பந்தமும், ஹஸ்ரத் ஷம்ஸ் தப்ரேஸ் அவர்கள் கொலையுண்டதும் விபரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களின் குணாதிசயங்களும், அவர்களின் உபதேசங்களும் அடங்கியுள்ளன. விலை அணா 10

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ.20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இரத்தச் சின்னம்.

## (தொடர் கதை 14—வது பகுதி)

### அத்தியாயம் 29.

கிரீன், தான் உலகில் யாரையும் நம்புவதில்லை யென்று பெருமை பேசுவதுண்டு. இருந்த போதிலும் தனது லாயரிடம் தனது இரகசியங்களுள் சிலவற்றை தெரியப்படுத்தி கலந்தாலோசிக்க வேண்டிய தாகிறது.

இன்ஸ்பெக்டர் சுடுபட்ட இருதினங்களுக்குப்பின், கிரீனின் லாயர் கிரீன் வீட்டிற்கு குதூகலமாக ஓடிவந்தார். இரத்தச் சின்ன சங்கத்தினர் மாரீஸிடமிருந்து வாங்கிய நோட்டுகளில் ஒன்றை இவர் கண்டு பிடித்து விட்டார்.

“நமக்கு தற்போது ஒரு வழி அகப்பட்டு விட்டது. இதே வழியாக இந்த நோட் வந்த வழியே திரும்பிச் செல்வோமாயின் முதலில் இந்த நோட்டை செலவு செய்தவரைக் கண்டு பிடிக்க முடியும்” என்றார் லாயர்.

இந்த ஸால்மன்ஸ் லாயர் கம்பெனி வசம் கிரீன் நோட்டைக் கண்டு பிடிக்குமாறு சொல்லி யிருந்தும், தற்போது கண்டுபிடித்தபின், அந்த நோட் யாரிடமிருந்து வந்ததென்பதைக் கண்டு பிடித்தலை இதே லாயர் வசம் கொடுப்பதற்கு கிரீன் இஷ்டப்படவில்லை. இனி நோட் யாரிட மிருந்து வந்ததென்பதைக் கண்டு பிடித்தலை இன்னொரு கம்பெனி வசம் ஒப்படைக்கலா மென்று கிரீன் யோசித்தார். தனது முழு காரியாதிகளையும் ஓரே கம்பெனி செய்வதும், இவர் அந்த ஓரே கம்பெனியை நம்பியிருப்பதும் இவருக்கு பிடிக்கவில்லை. அதை மனதில் மாத்திரம் வைக்காமல் குதூகலத்துடன் வந்த ஸால்மன்ஸ் லாயர் வசமும் திறந்து சொல்லி விட்டார்.

அதைக்கேட்ட லாயர் “தாங்கள் இவ்வாறு சொல்வது சரியல்ல. நானே சொந்த முயற்சியால் அதிக கஷ்டப்பட்டு இந்த நோட்டை கண்டு பிடித்தேன். இனி இதை மாற்றியவர் யாரென்று கண்டு பிடிப்பது அவ்வளவு சிரமமல்ல. சிறிது நாட்களில் கண்டு பிடித்து விடுவேன்” என்றார்.

இனி நோட்டை செலவு செய்தவன் யாரென்று கண்டுபிடிப்பது சுலபம் என்று கிரீனுக்கு நன்றாகத் தெரியும். இனி இந்த வேலையை

யார் வசமும் ஒப்படைக்காமல் தானே செய்யலாம் என்ற தீர்மானத்திற்கு வந்ததுடன், லாயர் வேண்டுகோளை மறுத்து அவரை அனுப்பிவிட்டார்.

இந்த கிரீன் முதலில் கையில் பணமில்லாமல் ஒவ்வொரு ஊராக அலைந்து, நிலங்களை விற்பது, வாங்குவதில் கமிஷன் வியாபாரம் செய்து, சிறிது பணம் சம்பாதித்தபின் தானே நிலங்களை வாங்குவது லாபத்திற்கு விற்பதுமாக வியாபாரம் செய்து தற்போது பெரிய பணக்காரனாகயிருக்கிறார். இவர் தனது பொருளை சம்பாதிக்க இதுவரை எவ்வளவு கஷ்டமெடுத்தாரென்று அவருக்குத்தான் தெரியும். அவ்வாறெல்லாம் அலைந்து திரிந்து கஷ்டமெடுத்தவருக்கு, இந்த நோட் எங்கிருந்து வந்ததென்று கண்டு பிடிக்கும் வேலை பிரமாதமாக தோன்றவில்லை.

இரண்டு மூன்று இடங்களில் விசாரணை செய்து, கடைசியாக ஒரு பெரிய பாங்கிலிருந்து அந்த நோட் வெளியானதாக கிரீன் அறிந்தார். அந்த பாங்கிலும் இவருக்கு கணக்கு யிருந்ததால், அந்த மானேஜரை கைக்குள் போட்டுக்கொண்டு, பாங்க் கணக்கு நோட் புஸ்தகங்களையெல்லாம் பிரட்டி சோதித்தார். கணக்குகளை இரகசியமாக ஒன்றிரண்டு நாள் பிரட்டி பிரட்டி பார்த்தபின் அந்த நோட்டை பாங்கில் போட்டவன் யார் என்பதை அறிந்தார். அத்துடன் அவர் அச்சமாசாரத்தை விட்டபாடில்லை.

மறுநாள் காலை அவசரமாக பிரான்ஸுக்கு பிரயாணமானார், பிரான்ஸின் தலைநகரம் பாரீஸில் இரண்டுமணி நேரம்தா னிருந்தார். பிறகு அங்கிருந்து அன்றிரவே தெற்குப் பக்கம் பிரயாணமாகி மறுநாள் காலை 9 மணி சுமாருக்கு ஸாண்டி நகரத்தை யடைந்தார். அங்கு அதிர்ஷ்டவசமாக, தனக்கு முன்பு ஒரு சொத்து வாங்குவதில் உதவியாக இருந்த ஒரு லாயரைச் சந்திக்க நேர்ந்தது. அந்த லாயர் கிரீனைப் பார்த்ததும், இவர் இன்னும் ஏதோ சொத்து வாங்க வந்துள்ளாரென்று சந்தோஷத்துடன் வரவேற்றார்.

கிரீன் தான் அங்கு வந்த காரியத்தை விபரித்ததும், லாயர் உற்சாகம் குன்றி, "மிஸ்டர் கிரீன், நான் லாயராக இருந்தாலும் கிரிமினல் கோர்ட் பக்கம் போவதில்லை. இருந்தபோதிலும்" என்று சொல்லிக் கொண்டே, தனது தாடியை தடவியவாறு யோசித்துக் கொண்டே "எனக்கு ஞாபகமிருக்கிறது, ஹட்டன் அவனுடன் ஒரு இங்கிலீஷ் காரனும் சேர்ந்திருந்தான்" என்றார்.

"அவன் பெயர் டிராம்மன்ட் அல்லவா?" என்று கிரீன் கேட்டார்.

"ஆம், ஆம், தற்போது ஞாபகம் வருகிறது. அவர்கள் சரித்திரம் பேர் போனதாயிற்றே. ஒரு பாங்கின் காஷியரையும், காவர்காரனையும்

சுட்டார்கள். அதற்குப் பின்னுலும் ஒரு அபூர்வ விஷயம் நடந்தது" என்ருர் லாயர்.

"அது என்ன விஷயம்?"

"அந்த ட்ரம்மன்ட் தலையை வெட்ட ஏற்பாடாயிற்று. அன்று அந்த கத்தியை தயார் செய்பவர்கள் குடித்திருந்தார்களோ, என்னமோ, மேலே தள்ளிவிட்ட கத்தி கீழே விழுந்து ட்ரம்மன்ட்டின் தலையை வெட்டாமல் வழியிலே நின்று விட்டதாம். மூன்று முறையும் அவ்வாறே கத்தி அந்த மிஷினில் மேலிருந்து கீழ்வரை வரவில்லையாம். வழியில் நின்று விட்டதாம். அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் மூன்று முறையும் தப்பித்தவனை இனி வெட்டக்கூடாதென்று கிளர்ச்சி செய்யவே, டிரம்மன்டை ஜெயிலினுள் அழைத்துச் சென் ருர்களாம் எப்படி அந்த சிகப்பு வட்டம் தப்பித்துக் கொண்டான்!" என்ருர் லாயர்.

கையில் கோப்பையுடன் டீ அருந்திக்கொண்டிருந்த கிரீன் பதரி கையிலிருந்த கோப்பை கீழேவிழுந்தது.

"என்ன ?" என்று ஆச்சரியத்துடன் லாயர் கீழே விழுந்த கோப்பையை நோக்கினர்.

"என்ன! சிகப்பு வட்டம்! அது என்ன?" என்று உடல் நடுங்க வியப்புடன் கிரீன் கேட்டார்.

"அதுதான் டிரம்மன்ட். அவனை சிகப்பு வட்டம் என்றுதான் கூப் பிடுவது. அவனைப்பற்றி முழு விஷயம் எனது கிளார்க்கை கேட்டால் தெரியும்" என்று சொல்லி பக்கத்திலிருந்த மணியை யடித்தார் லாயர்.

ஒரு வயது முதிர்ந்த பிரென்ச் கிழவனுர் வந்தார்.

"ஜரீஸ்! உனக்கு சிகப்பு வட்டம் ஞாபக மிருக்கிறதா ?" என்று லாயர், வந்த கிளார்க்கை கேட்டார்.

"நன்ருக ஞாபக மிருக்கிறது. அவன் தலையை வெட்டப்போகும் போது நானும் போயிருந்தேன்" என்ருர் கிளர்க்.

"அவனுக்கு ஏன் சிகப்பு வட்டம் என்று பெயர்?" என்று கிரீன் கேட்டார்.

"ஒரு குறியினுல் அப்பெயர். அவனுடைய கழுத்தில் ஒரு சிகப்பு வட்டம் இருக்கும். அவன் பிறந்ததிலிருந்து அது உண்டு. அதனுல் ஜனங்கள் ஒரு புராண கதைப்போல், அந்த சிகப்பு வட்டமிருப்பதால் அந்த கழுத்தில் எந்த கத்தியும் இறங்காது என்பர். ஜனங்கள் சொல்லியபடியே அன்று கத்தியும் வேலை செய்யவில்லை" என்ருர்.

தற்போது கிரீனுக்கு முழு விபரம் விளங்கலாயிற்று.

"அதற்கு பின் சிகப்பு வட்டத்திற்கு என்ன நேர்ந்தது ?" என்று கிரீன் கேட்டார்.

"எனக்கு தெரியாது. ஹட்டன் கவர்ன்மென்ட் சார்பில் சாட்க்ஷி சொல்லியதால், அவனுக்கு விடுதலை கிடைத்தது. பின்பு டிராம்மன்டும் ஜெயிலிலிருந்து தப்பித்து ஓடி விட்டதாக வதந்தி. அது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்கு தெரியாது" என்று கிளர்க் சொன்னார்.

டிராம்மன்ட் தப்பித்து ஓடிப் போயிருக்கக் கூடுமென்று கிரீன் நினைத்தார். அத்துடன் விடாமல் கிரீன் அங்கிருந்து போலீஸ் தலைமை ஆபீஸுக்கும் போய் டிராம்மன்ட்டை பற்றி நன்றாக தீர்க்க விசாரித்ததுடன் அவனுடைய போட்டோக்களையும் நன்றாக பார்வையிட்டு திருப்தி அடைந்தார். அன்றிரவுதான் யாதொரு கவலையுமில்லாமல், தனது வேலை திருப்திகரமாக முடிந்தது என்று சந்தோஷத்துடன். கிரீன் அங்கேயே ஒரு ஹோட்டலில் நன்றாக அயர்ந்து தூங்கினார். போலீஸ் இதுவரை கண்டுபிடிக்க முடியாத இரத்த சின்ன சங்கத்தின் இரகசியத்தை கிரீன் கண்டு பிடித்து விட்டார்.

(தொடரும்)


## ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்களின் சரித்திரச் சுருக்கம்

இதில் திருச்சி ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா அவர்கள் ஒரு அரச குமாரனாகயிருந்து தனது தந்தை காலஞ்சென்றபின் தானே நீதி நெறியுடன் அரசு புரிந்து வரும் காலத்தில், ஓர் சொர்ப்பணம் கண்டதின் காரணமாக, சிம்மாசனத்தை விட்டு ஷய்க்கைத் தேடிச்சென்று, முரீது வாங்கியதும், பின்பு பிரயாணத்தில் தங்களுக்கு எதிராக வந்த அநேக பூதங்களை எதிர்த்து வென்றதும், பின் இலங்கைக்கு போய் ஆதம் (அலை) மலையில் ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்து, 'தப்லேஆலம்' என்னும் பட்டத்தைப் பெற்ற பின் திருச்சி வந்ததும், அவர்கள் செய்த கருமத் அற்புதங்களும், அவர்களின் வபாத்தும் மிக விபரமாக விளக்கப்பட்டிருக்கிறது

இதன் விலை அணா. 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# நன்னெறிகள் பற்றி நபிகள் பிரான் நவின்றுள்ளது.

(திரட்டியவர்: எம். கே. ஏ. எஸ். அஹ்மத்மீரா, சீருடையபுரம்.)

சொர்க்கமாகிறது கொடையாளிகளுடைய வீடா யிருக்கிறது. இன்னம் ஈயும் குணமாகிறது நபிமார்களின் குணமா யிருக்கிறது.

இன்னம் நீங்களாகிறது ஒருவருக் கொருவர் அநியாயம் செய்து கொள்ள வேண்டாம். அது உங்களது ஈமானை உறிஞ்துவிடும். அதற்காக (இறைவனால்) மறுமை நாளிலே கடின வேதனை செய்யப்படும்.

இன்னம் நீங்கள் (ஸினுவுக்கு) விபசாரத்திற்கு விழைய வேண்டாம். அது மாபெரும் பாதகமாகவும்—மறுமை நாளிலே (பழீஹத்தாகவும்) இழி நிலையாகவு மிருக்கும்.

இன்னம் மது (லாகிரி—அதாவது மஸ்தையுண்டு பண்ணுப வைகளை) அருந்த வேண்டாம். அதாகிறது உங்கள் அறிவை இழக்கச் செய்து—இறை நம்பிக்கையை குறையச் செய்து அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்குகிறது.

இன்னம் நீங்கள் வட்டி தின்ன வேண்டாம். அதாகிறது உங்கள் முதல்களை அழித்து நஷ்டத்திலாழ்த்தி விடும். அதன் லாபம் நஷ்டமாகவே முடியும்.

இன்னம் நீங்கள் கோள் சொல்லவும்—புறம் பேசவும் வேண்டாம் அது உங்களை நரகத்திலாழ்த்தி விடும்.

இன்னம் நீங்கள் பொறுமை கொள்ள வேண்டாம். நெருப்பு எங்ஙனம் விறகைத் தின்கிறதோ அங்ஙனமே உங்கள் நன்மைகளை பொறாமை தின்று விடும்.

இன்னம் நீங்கள் பெருமை யடிக்க வேண்டாம். அது உங்களை இறைவனை நேசிப்பதை விட்டும் விலக்கி வைக்கிறது.

இன்னம் நீங்கள் நிலையில்லாத இவ்வுலகத்தின் மேல் (ஆழிய) ஆசை வையாதீர்கள். அதாகிறது மறுமை நாளில் உங்களது நற்பெயரைக் கெடுத்துவிடும்.

இன்னம் இறைவனின் கற்பனையைப் பொருந்திக் கொள்ளுங்கள். அவன் நமக்குக் கொடுக்கும் இன்னல்களைக் கொண்டு (ஸப்ரு) பொறுமை செய்யுங்கள். (நிச்சயமாக இறைவனாகிறவன் பொறுமையாளர்களுடனா யிருக்கிறான் என்பது குர்ஆன்.)

இன்னம் நீங்கள் இவ்வுலகில் நீண்ட காலம் இருப்போம்—சுகிப்போம் என்று மேலெண்ணம் கொள்ள வேண்டாம் அதாகிறது உங்களுக்கு மறுமை நாளின் பயங்கரத்தையும் சொர்க்கத்தின் இன்பத்தையும் மறக்கச் செய்திடும்.

## மிப்தாஹுஸ்ஸலாஹ் பீ யீலாஹின்னிகாஹ்.

(இப்புத்தகம் இல்லறவாசிகள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது.)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும், ஸ்திரி புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்க ளென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக் கூடிய வழியும், ஸ்திரீ புருஷர்கள் அவசியம் அறியவேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனையும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கி யிருக்கின்றன.

இவை யன்றி ஸ்திரீ புருஷருக்கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும், ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன்பதிப்பி லிருந்ததை விட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும்.

புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு விலை ரூ. 3

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# "வின்ஸ்டன் சர்ச்சில்"

(முஹம்மது தாவூது)

## (2—வது பகுதி)

அதிக உற்சாகமும் ஊக்கமும் உள்ளவரும் கல்வி மீது வெறுப்புக் கொண்டவருமான சர்ச்சில் குறும்புத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடலானார். மாணவர்களில் சிலருக்கு அவர் பெரும் தலைவலியாக விளங்கினார். அவர்கள் அனைவரும் அவரைப்பற்றிய சுவாரஸ்யமான தகவல்களை வெளியிட்டுள்ளனர். இவற்றிலிருந்து அவரது மாணவ வாழ்க்கை நமக்கு நன்கு தெரியக்கிடக்கின்றது.

குறும்புத்தனம் இருந்து வந்தபோதிலும் ஹாரோவில் ஏற்பட்ட தோல்விகள் அவரைக் கவலைக்குள் ஆழ்த்தியது. பிரஷ்டம் செய்யப்பட்டதாக உணர்ச்சி ஏற்படுவதும் கல்வி என்னும் பந்தயத்தின் துவக்கத்திலேயே பின்னால் விடப்பட்டுச் செல்லப்படுவதும் மகிழ்ச்சிதரும் விஷயங்கள் அன்று என்று அவர் தமது நூலில் எழுதியுள்ளார். ஹாரோ பாடசாலையில் அவருக்குக் கிடைத்த அவமதிப்பு, அவமரியாதையின் விளைவே அவரது அளவிலா அதிகார ஆசை, அவரது முரட்டுப்பிடிவாதம், என்று சொல்லலாம். 1941-ம் ஆண்டிலே பிரதம மந்திரியானதும் ஹாரோவுக்கு அவர் மீண்டும் விஜயம் செய்தபோது தரைமீது தமது தடியை ஓங்கி அடித்து, "ஒரு போதும் மனம் சோர்ந்து விடாதீர்கள்" என மாணவர்களுக்கு அவர் புத்திமதி கூறினார். தமது பழைய பாட்சாலையிடம் அவர் கொண்டுள்ள விசுவாசத்தின் காரணமாக அந்தக்கல்விஸ்தாபனத்துக்கு அவர் அடிக்கடி விஜயம் செய்து வருகிறார்.

பாடசாலையில் தமது தோல்விகள் பற்றி அவர் கூறுவதாவது: "மிகக்கீழ் வகுப்பில் நீண்ட காலம் இருந்தமையால் புத்திசாலி மாணவர்களைவிட எனக்கு நல்லதொரு அனுகூலம் கிடைத்தது. லத்தீன் கிரேக்க மொழிகளையும் இதர விஷயங்களையும் அவர்கள் படித்துக் கொண்டே சென்றனர். ஆனால் எனக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கப்பட்டது. புத்தி கூர்மையில்லாத முட்டாள் மாணவர்களுக்கு மிகவும் புறக்கணிக்கப்பட்ட விஷயத்தை அதாவது ஆங்கிலம் எழுதக்கற்றுக் கொடுக்கும் பொறுப்பு மிஸ்டர் சோமர் வெல்லிடம் ஒப்புவிக்கப்பட்டது. இந்த மனிதருக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். தமது பொறுப்பை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது அவருக்குத் தெரியும். மற்ற எவரும் கற்றுக் கொடுத்திராதவகையில் எங்களுக்கு

187043

அவர் (ஆங்கிலம் எழுத) கற்றுக்கொடுத்தார். மூன்ருவது பாரத்திலே மற்ற மாணவர்களைவிட மூன்று மடங்கு அதிக காலம் நான் தங்கியிருந்தமையால் அவர்களுக்குத் தெரிந்ததைவிட எனக்கு மூன்று மடங்கு அதிகம் தெரிந்தது. இவ்வாருக, சாதாரண ஆங்கில வாக்கிய அமைப்பு முறை எனக்கு நன்கு விளங்கி, மனத்திலே வேரூன்றியது. இது ஒரு சிறந்த காரியம்."

மற்ரெருரு தமது சகோதரர் ஜாக்குடனும் ஒன்றுவிட்ட சகோதரருடனும் பிடிக்கும் விளையாட்டு விளையாடியதால் ஸாண்ட் ஹர்ஸ்டிலுள்ள ராணுவக் கழகத்தில் அவர் சேர்ந்து கொள்வது சுமார் ஒரு வருட காலம் தாமதப்பட்டது. ஒரு கால்வாய்க்கு குறுக்கே சென்ற மரப்பாலத்தில் அவரை அவ்விருவரும் மடக்கி விட்டார்கள். எப்படித் தப்பித்துச் செல்லலாம் என அவர் துரிதமாக ஆலோசித்தார். இச்சந்தர்ப்பத்தில் மார்ல்பரோ என்ன செய்வார் என அவர் யோசித்தார். இதற்குப்பதிலும் தெளிவாகக் கிடைத்தது—பூமியிலுள்ள வெடிப்புகளில் முளைத்துள்ள தேவதாரு மரங்களின் உச்சிக்குச்சென்று கிளை கிளையாகப்பற்றிப் பிடித்து அவர் (மார்ல்பரோ) தப்பிச் சென்று விடுவார். சர்ச்சில் ஏஊனக்கூச்சல் போட்டு, இருபத்தொன்பது அடிக்கு அப்பாலுள்ள இடத்துக்கு தாவி, அதற்கும் கீழ் உள்ள பாறைகளின் மீது மோதினர். இதனல் அனேக காயங்கள் ஏற்பட்டன; மூத்திரக் காய்கூட பழுதடைந்தது. அவரது உயிரைக் காப்பாற்றுவதற்காக விசேஷ நிபுணர்கள் அழைக்கப்பட்டனர். இந்த விளையாட்டைப் பற்றிஅவர் பின்னர் கூறியதாவது: "வாதம் சரியானது. புள்ளி விவரங்கள் தான் முற்றிலும் தவருனவை."

ஸாண்ட் ஹர்ஸ்ட் ராணுவக் கழக பிரவேசப் பரீக்ஷையில் அவர் இரண்டு தடவைகள் தோல்வியுற்ருர். மூன்ருவது, இறுதியில் வெற்றிகரமான பரீக்ஷைக்காக அவருக்குப்பாடம் சொல்லிக்கொடுத்த கேப்டன் ஜேம்ஸ் என்பவர் பின்வருமாறு கூறினராம். "அந்தச் சிறுவன் (சர்ச்சில்) ஹாரோவில் கல்விகற்றிருக்க முடியாது." ஆனல், ராணுவ கழகத்தில் சேர்ந்ததும் சர்ச்சிலின் மனேபாவத்தில் மாறுதல் ஏற்பட்டது. பழைய முரட்டுப் பிடிவாதம், உறுதி, தைரியமான, துணிச்சலான உணர்ச்சி ஆகியவை நிலைத்திருந்த போதிலும் இணங்காமைக்குணம் மங்கி மறைந்தொழிந்தது. வகுப்பு அறைகளிலே அமைதியாகவும் அடக்கமாவும் நடந்து கொண்டதோடு மாலைவேளைகளில் பெரும்பாலும் படிப்பில் கவனஞ் செலுத்தி வரலானர்.

ஸாண்ட் ஹர்ஸ்டில் அவரது மாணவ வாழ்க்கைபற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. அப்போது கல்லூரியில் இருந்த ஒருவருக்குக்கூட, அவரது நடத்தை, நடவடிக்கைகள் பற்றிய நினைவு இல்லை. ஹாரோவில் பிற்போக்கு மாணவராக இருந்த அவரைப்பற்றி ஒவ்

வொருவரும் நன்கு தெரிந்திருந்தனர். ஸாண்ட் ஹர்ஸ்டில் அவாது முயற்சிகள் வெற்றிகரமானவையாக விருந்தன. குதிரைச் சவாரியில் சமர்த்தராக விருந்தார். ஆனல், மாணவர்களிடம் அல்லது உபாத்தியாயர்களிடம் குறிப்பிடத்தக்க விதமாக அவர் நடந்து கொள்ளவில்லை.

உண்மையை உரைக்குமிடத்து, தொழிலுலகின் போர் முரசு அவாது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. ராணுவத்தையே தமது தொழிலாகக் கொள்ள வேண்டுமெனவும் மார்ல்பரோ பிரபுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல வேண்டுமெனவும் அவர் எண்ணினர். குறும்புத் தனத்தின் விளைவாக கல்விக்குக் குந்தகம் விளையாமல் கவனித்துக் கொண்டு கல்வியில் கண்ணுங் கருத்துமாக இருக்க ஆரம்பித்தார். நூற்று ஐம்பது மாணவர்கள் கொண்ட வகுப்பில் அவர் எட்டாவது ஸ்தானம் வகித்தார்.

ஸாண்ட் ஹர்ஸ்ட் படிப்புக்குப் பிறகு ராணுவத்தில் சேர்ந்து சேவை செய்வதற்கான வசதியும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தன. திடகாத்திரமுள்ளவரும் நகைச்சுவை ததும்பும் பேச்சும் தைரியப் போக்குமுள்ள அவர் லண்டன் பிரமுகர்களின் கவனத்தையும் மனத்தையும் கவர்ந்தார். பிரபலஸ்தர்கள் கலந்து கொள்ளும் விருந்துகளுக்கும் இதர வைபவங்களுக்கும் அழைப்புகள் கிடைத்த போது அவற்றை ஏற்றுக் கொண்டு எந்த விதமான ஆயத்தமும் செய்யாமல் அவற்றில் கலந்து கொண்டு வந்தது அவாது தோழர்களி லொருவரைப் பெரிதும் கவர்ந்தது. அம்மனிதர் கூறியதாவது:—பெரிய மனிதர்களின் மத்தியில் இருந்த போதிலும் சுயகௌரவத்தை வின்ஸ்டன் விட்டுக் கொடுக்கவில்லை. பிரபலஸ்தர்களான தமது முதியவர்களின் சம்பாஷணைகளின் போது இடைமறித்துப் பேசாமல் அவர்களது பேச்சு முடிவடையும் வரை பொறுமையாகக் காத்திருந்து, பின்னர் தமது அபிப்பிராயத்தை அவர் தெரிவிப்பார். அவாது அபிப்பிராயம் அப்போது நிகழும் விவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடிய வகையில் இறுதியானதாக விருக்கும்.

கடைசியில், குதிரைப்படையில் சர்ச்சில் சேர்ந்தார். அந்தக்காலம் பிரிட்டிஷ் சரித்திரத்திலே மிகவும் சுபீக்ஷமானதாகும். சாம்ராஜ்ஜியம் பயமின்றிப் பத்திரமாக விருந்தது. வெளிநாட்டு வாணிபத்தில் இறக்குமதியைவிட ஏற்றுமதி அதிகமாக விருந்தது. விக்டோரியா ராணியின் நேரிய, சீரிய ஆட்சியால் நாட்டில் ஸ்திர அரசாங்கம் இயங்கி வந்தது. ராணுவத்திலே ஏழு மாதங்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. வருடத்தில் எஞ்சியுள்ள ஐந்து மாதங்களுக்கும் மாரிக்காலத்தில் ராணுவத்தினருக்கு விடுமுறை விடப்பட்டு வந்தது. அந்தக்காலத்திலே சமாதானமும் சந்தோஷமும் நிலைத்திருந்தது.

ஆகவே, அது சோல்ஜர்களுக்குப் பிடிக்காத அலுப்பும் சலிப்பும் அளிக்கும் தருணமாக விருந்தது.

1895-ம் வருடம் கோடைக்கால இறுதிவரை சர்ச்சில் நிச்சய மில்லா வாழ்க்கை நடத்தி வந்தார். வேலையில்லை யென சகல உத்தியோகஸ்தர்கள் புகார் சொல்லி வந்தனர். ஆனால், சர்ச்சில் இங்கிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வந்தார். கியூபாவில் புரட்சி உருவாகிற தென்பதை யறிந்ததும், ராணுவத்திலிருந்து தற்காலிக ரஜா பெற்றுக் கொண்டு, கியூபாவில் பத்திரிகை நிருபராகப் பணியாற்றுவதற்கென "டெய்லி கிராபிக்" பத்திரிகையுடன் அவர் ஏற்பாடு செய்து கொண்டார். அவர் அனுப்பும் ஒவ்வொரு கடிதத்துக்கும் இருபத்தைந்து பவுன் சம்பளம் அளிக்க பத்திரிகை நிர்வாகிகள் சம்மதித்தனர். அநேக மாதங்கள் வரை அவர் இந்த வேலையை செய்து வந்தார். மறைந்திருந்து தாக்குதல் நடத்தும் போர் உபாயம் பற்றி முதல் முறையாகத் தெரிந்து கொள்வதற்கு இதன் மூலம் அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

அவர் லண்டன் திரும்பி வந்ததும், அவர் சேர்ந்திருந்த குதிரை படை இந்தியாவில் சேவைக்கென அனுப்பப்பட்டது. போலோ விளையாட்டில் அந்தப் படைவீரர்கள் ஈடுபடலானார்கள். இந்த விளையாட்டில் முழு உற்சாகத்துடன் ஈடுபட்ட சர்ச்சில் அதில் நல்ல திறமை, நிபுணத்துவம் பெற்றார். ஆனால், பெங்களூரில் ராணுவ வாழ்க்கை அவருக்கு வேம்பாகத் தோன்றியது. 1897-ம் வருடத்தில் தந்திரோபாயத்தின் மூலம் மூன்று மாத ரஜா பெற்றுக் கொண்டு, பட்டாணியர்களின் கிளர்ச்சியை அடக்குவதற்காக எல்லைப்புற மாகாணத்துக்கு அனுப்பப்பட்ட அவரது சிநேகிதரான சர்பிண்டன் பிளடைத் தூண்டி, பத்திரிகை நிருபராகப் படையுடன் செல்வதற்கு அவர் அனுமதி பெற்றார். காலம் (Column) ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் சர்ச்சில் அனுப்பும் தகவல்களுக்கு பணம் செலுத்துவதற்கு "டெய்லி டெலகிராம்" சம்மதித்தது. பிரயாண செலவுகளை தானே செலுத்த வேண்டியிருந்தது என்பதை கவனிக்கும் போது இந்த சம்பளம் அதிகமான தல்ல என சர்ச்சில் புகார் கூறினார்.

பட்டானியர்களை எதிர்த்துப் போர் புரிந்து வந்த படையுடன் போர்களத்துக்கே அவர் சென்று விட்டார். நேரில் கண்ட காட்சிகளை தத்ரூபமாக பத்திரிகைக்கு அவர் செய்தி அனுப்பி வந்தார். மற்றும் வீரதீரத்துடனும் நடந்து கொண்டமையால் தாம் அனுப்பி வந்த தகவல்களில் சர்ச்சிலைப் பற்றி சர் பின்டன் புகழ்ந்து கூறி யுள்ளார். பத்திரிகையின் யுத்த நிருபர் என்ற முறையிலே அவர் பிரக்யாதி பெற்றார். அவர் அனுப்பி வந்த தகவல்கள் பெரிதும் போற்றிப் படிக்கப்பட்டன. இத்தகவல்களைத் தொகுத்துப் புத்தக உருவில்

அவர் வெளியிட்ட போது அந்த புத்தகங்களும் அதிகம் விற்பனையாயின. அவரது வயதுக்கு மேம்பட்ட ஞானமும் பொது அறிவும் அவரது நூலில் பிரதி பலிப்பதாக ஒரு பத்திரிக்கை பாராட்டி எழுதியது. கண்டனங்களுக்குத் தகுந்த சமாதானம் கூறி, ராணுவப் பிரச்னைகளுககு—பிரிட்டிஷ் ராணுவ தலைமைக் காரியாலய அதிகாரிகளுக்குக்கூட புரியாத புதிராக விருந்த பிரச்னைகளுக்கு—அவர் கூறிய பரிகாரங்களைக் கருத்தில் கொண்டு, எல்லைப்புற சமர் சம்பந்தமாக அவர் தொகுத்த நூலுக்கு ஜெனரல்களுக்குக் காப்டனுக்கும் குறைந்த அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தரின் குறிப்புகள் எனப் பெயரிடலாம் என மற்றொரு பத்திரிகை யோசனை கூறியது.

இப்புத்தக விற்பனை மூலம் ராணுவத்தில் இரண்டு வருட சம்பளத்துக்குச் சமமான வருமானம் அவருக்குக் கிடைத்தது. பத்திரிகைத் தொழில் படை (ராணுவ) சேவை, ஆகிய இரு துறைகளிலும் ஈடுபடுவது லாபகரமானது என்பதை அவர் தெரிந்து கொண்டார். பெங்களூரில் தமது படையுடன் மாமூல் சேவைக்குப் பிறகு 1898-ம் வருடத்திலே ஆப்ரிக்க சூடானிலே சேவை செய்யும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. பல்லாயிரக் கணக்கான எகிப்தியர்களைப் படுகொலை செய்து வந்த தர்வேஷ்களை அடக்கி ஒடுக்குவதற்காகச் சூடான் செல்வதற்குப் படை திரட்டப்பட்டு வந்தது. சூடான் படை யெடுப்புக்கான குதிரைப் படையுடன் சம்பள மில்லாத லெப்டினென்டாக அவர் சென்றார். செலவுகளையும் அவரே செலுத்த சம்மதித்தார்.

நீல நதியைக் கடந்து ஓம் துர்மானை நோக்கி ராணுவம் சென்று கொண்டிருந்த போது, எதிரியின் முன்னேற்றத்தை முதலில் கண்டரோந்து கோஷ்டியில் சர்ச்சில் ஒருவராக விருந்தார். காலம் (Column) ஒன்றுக்குப் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் மார்னிங் போஸ்ட்" பத்திரிகையின் யுத்த நிருபராக அவர் அமர்த்தப்பட்டிருந்தார்.

தமது முதல் குதிரைப் படைத் தாக்குதலுக்கு மத்தியில் இருப்பதை அவர் விரைவில் கண்டு கொண்டார். சரித்திரத்திலே இது தான் கடைசி தாக்குதல் ஆகும். எஃகு ஆயுதங்களுடன் எஃகு ஆயுதங்கள் மோதிக் கொண்டன. தர்வேஷ்களின் ஈட்டி, உடைவாள், குழல் துப்பாக்கி (Rifle) ஆகியவற்றை எதிர்த்து பிரிட்டிஷார் வேல், கைவாள் ஆகியவற்றை உபயோகித்துப் போர் புரிந்தனர். இரத்த வெள்ளப் பெருக்கு எடுத்து ஓடச் செய்யும் போர் மூண்டது. இந்த வெஞ்சமர் பற்றி சர்ச்சில் எழுதியதாவது: எங்கும் பயங்கரமான தோற்றம். குதிரைகள் இரத்த வெள்ளத்தில் மிதந்தன. புயங்களும் முகங்களும் சின்ன பின்னப்படுத்தப்பட்டவர்களும் குடல் பிதுங்கியவர்

களுமான மனிதர்கள் தடுமாறித் தள்ளாடிக் கொண்டிருந்தனர். மனிதர்கள் கஷ்டப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டும் கதறி யழுதுக் கொண்டும் மயக்கமுற்றுக் கீழே விழுந்துக் கொண்டும் மரண மடைந்து கொண்டும் இருந்தார்கள்.

வெஞ்சமர் பற்றிய விவரங்களில் தமது சொந்த நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை சர்ச்சில் குறிப்பிடாமல் விட்டு விட்டார். போர்க் களத்தி லிருந்து அவரும் மற்றொரு உத்தியோகஸ்தரும் புறப்பட்டு குதிரையில் சவாரி செய்து கொணடு செல்லும் போது, வழியில் குதிரைகளை விட்டிறங்கி தர்வேஷ்களின் கைகளில் சிக்கிக் கொண்டு மரணப் பிடியில் இருந்த இரு சோல்ஜர்களைக் காப்பாற்றுவதில் முனைந்தனர். போருக்குப் பிறகு, காயமுற்ற ஒரு சோல்ஜருக்கு மற் றொருவரின் சதையை வெட்டிப் பொருத்த வேண்டியதாக விருந்தது. சர்ச்சில் மனமுவந்து தமது முன் புஜத்தி லிருந்து அரைகிரவுன் அளவுள்ள சதையை வெட்டி யெடுத்து அந்த சோல்ஜரின் உடலில் பொருத்தி அவரது உயிரைக் காப்பாற்றினர். இவ்வாறு, சதை வெட்டி யெடுக்கப்பட்டதால் ஏற்பட்ட வடு இன்னும் இருந்துகொண்டி ருக்கிறது. ஓம்துர்மான் போரில் சர்ச்சிலுக்கு ஏற்பட்ட ஒரே காயம் இதுதான்.

இங்கிலாந்துக்குத் திரும்பி வந்ததும் ராணுவத்திலிருந்து விலகி விடுவதென அவர் தீர்மானித்திருந்தார். பத்திரிக்கைத் தொழில் அவருக்கு கவர்ச்சிகரமானதாகவும் லாபகரமானதாகவும் தோன்றியது. ஆனல், அவரது தங்கையின் நண்பரான அரசாங்க மந்திரி யொருவரு டன் விருந்துண்டு கொண்டிருக்கும்போது அரசியல் அரங்கில் ஈடுபடு வது பற்றியும் ஆலோசித்துக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரசியல் அரங்கிலே பிரவேசிக்கவேண்டுமென்ற அவா எப்போது ஏற்பட்டது என அம்மந்திரி வினவியபோது, "நான் பெரியவனனது முதல்" என அவர் பதிலுரைத்தார்.

மந்திரி பின்கண்ட யோசனை கூறினர்: அப்படியானல், மத்திய அலுவலகத்துக்குச் சென்று உமது சேவைகளை அளிக்கத் தயார் என நீர் அறிவித்து விடவேண்டுமென்பதுதான் உமக்கு நான் கூறும் புத்தி மதி. அடுத்த நாள் பிற்பகல் கன்ஸர் வேடிவ் அலுவலகங்களுக்கு சர்ச் சில் அலையலானர். வெகு சீக்கிரம் பாத்தில் நடைபெற்ற டோரி (கன் ஸர் வேடிவ்) கட்சிக் கூட்டத்தில் தமது முதல் உத்தியோக பூர்வமான பிரசங்கத்தை அவர் நிகழ்த்தினர். அடுத்ததினம் "அரசியல் அரங்கிலே புதியதொரு நபர் தோன்றி யிருக்கிறர்" என "போஸ்ட்" அறிவித்தது. அக்கூட்டத்தில் நிகழ்த்திய பிரசங்கம் பற்றிய தகவலைத் திருத்தித்தரு மாறு சர்ச்சிலையே அப்பத்திரிக்கை ஆசிரியர் கேட்டுக் கொண்டிருந்தார். பிரசங்கத்திலோர் இடத்தில் வளைவுக்குறிக்குள் "சந்தோஷ ஆரவாரம்"

என்று போடப்பட்டிருந்ததை "உரத்த, நீண்ட சந்தோஷ ஆரவாரம்" என அவர் மாற்றியதை அப்பத்திரிக்கை ஆசிரியர் கண்டதும், அரசியலிலே சர்ச்சில் முன்னேறுவது சாத்தியம் என்பதை உணர்ந்து கொண்டார்.

1899-ம் வருடத்திலே நடைபெற்ற தேர்தலில் வடதிசை கைத் தொழில் ஸ்தலமான ஓல்ட் ஹாமில் அபேக்ஷகராக அவர் போட்டி யிட்டார் இங்கிலாந்து கிறிஸ்தவ மதத்தில் (Church of England) உள்ள சடங்கு, சம்பிரதாயங்களை வன்மையாகக் கண்டிப்பதையே தமது தேர்தல் பிரசாரத்துக்கு அவர் அடிப்படையாகக் கொண்டிருந்தது துரதிர்ஷ்டவசமானது. ஓல்ட் ஹாமிலே இருஸ்தானங்களையும் இழந்து விட்ட கன்ஸர் வேடிவ் கட்சியினர்; இந்த தோல்விக்கான பொறுப்பை பழியை சர்ச்சில் மீது சுமத்தினர். பின்னர் சர்ச்சில் பின்வருமாறு எழுதினர்:—ஒவ்வொருவரும் என்மீது பழி சுமத்தினர். அவர்கள் அனேகமாக எப்போதும் இவ்வாறு செய்கிறார்கள் என்பதை நான் கண்டு கொண்டேன். வெற்றிசண்ட எதிர்கட்சியினரைப் போன்ற மனோபாவம் கொண்டவராக இவர் இருந்தார். தம்மை எதிர்த்துத் தோல்வியுறச் செய்தவரான ரன்ஸிமான் என்பவரை நோக்கி, குறும்பாகப் பின் கண்டவாறு அவர் கூறினர். நம்மில் ஒவ்வொருவரைப் பற்றிய கடைசித் தகவலை உலகம் இன்னும் கேள்விப்படவில்லை என நான் நினைக்கிறேன். இக்கூற்று புரியாத புதிராகவும் பிரமிப் பூட்டுவதாகவும் இருந்தமையால் தமது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காகப் பத்திரிக்கை அலுவலகத்துக்கு ரன்ஸிமான் விரைந்து தேர்தல் முடிவுகளை மீண்டும் பரிசிலனை செய்தார்.

அரசியலி லிருந்து துறவறம்—உரிய காலத்துக்கு முன்பு—பூண்டதும் 1899ம் வருடம் இலையுதிர் காலத்தில் போயர் யுத்தம் ஆரம்பமாவதை சர்ச்சில் கண்டார். அது அவருக்கு மகிழ்ச்சி யூட்டும் சமிக்ஞையாக விருந்தது. இப்போர் பற்றிய தகவல்களை ரிபோர்ட், செய்வதாக "மார்னிஸ் போஸ்ட்"க்கு அவர் யோசனை கூறினர். மாதம் இருநூற்று ஐம்பது பவுன் சம்பளத்தில் யுத்த நிருபராக அவர் அமர்த்தப்பட்டார். அவரது பிரயாண செலவுகளையும் செலுத்துவதற்கு பத்திரிக்கை நிர்வாகம் ஒப்புக்கொண்டது. சந்தோஷத்துடன் சர்ச்சில் ஆப்ரிக்கா புறப்பட்டார். இந்தத் தடவை அவரது புகழ்மேலோங்கியது.

எஸ்ட் கோட்டிலுள்ள பிரிட்டிஷ் முகாமை அடைந்ததும் இந்தியர்களுடன் நடைபெற்றபோரில் கலந்துகொண்டவரான காப்டன் ஹால்டேனின் சிநேகத்தை அவர் சம்பாதித்துக் கொண்டார். போயர் நாட்டில் கவச ரயிலில் சென்று வேவு பார்க்கும் கோஷ்டிக்குத் தலைவராகப் பின்னர் இந்த காப்டன் அனுப்பிவைக்கப்பட்டார். இந்த வேலை அந்த மனிதருக்கு வெறுப்பு அளித்தது. சர்ச்சிலிடம் இதுபற்றி அவர் தெரி

வித்ததும் "மார்னிங் போஸ்ட்" யுத்த நிருபர் பின்வருமாறு தெரிவித்தார். "கவலைப்படாதீர்கள். உங்களுடன் நான் வருகிறேன்" மார்னிங் போஸ்ட்டுக்கு செய்யவேண்டிய கடமை அது என நான் கருதுகிறேன்"

எஸ்ட் கோட்டிலிருந்து சில மைல் தூரம் சென்றதும் ரயில் வழி மறிக்கப்பட்டது. இரு பெட்டிகள் குடை கவிழ்க்கப்பட்டன. மூர்க்கமான முயற்சிகள் செய்யப்பட்டபோதிலும் சேதத்திலிருந்து எஞ்சினையும் பாதுகாவலனையும் மட்டுமே மீட்க முடிந்தது. காயமுற்ற சுமார் நாற்பது நபர்களும் அவற்றில் ஏற்றபட்டுத் திரும்பி அனுப்பப்பட்டனர். கோஷ்டியைச் சேர்ந்த ஏனையோர் கால்நடையாகப் பின்தொடர்ந்தனர். சோர்வுற்ற சோல்ஜர்கள் பின்னடைந்து சென்றனர். அவர்களை உற்சாக மூட்டி ஒன்று திரட்டுவதற்காக சர்ச்சில் விரைந்தார். மலைக் குன்றுகளிலிருந்து அவர்களை போயர் குதிரை வீரர்கள் தாக்கினர்.

எஞ்சினில் தமது ரிவால்வரை அவர் விட்டுச் சென்றிருந்தார். எனவே, உடனே கைகளை உயரத் தூக்கி, குதிரை வீரரொருவர் சுட்டிக்காட்டியபடி போயர் அரண்களுக்கு அவர் செல்லவேண்டியதாயிற்று. நடந்து செல்லும் வழியில் தம்மை கைது செய்து செல்லும் அந்த நபரைப் பார்த்துப் புருவங்களை அவர் நெறித்தார். ஆறுவருடங்களுக்குப் பிறகு காலனிகளுக்கான துணைமந்திரி என்ற முறையில் தென் ஆப்ரிக்கா யூனியனின் முதல் பிரதம மந்திரியாக விரைவில் வரக்கூடிய ஜெனரல் போத்தாவை அவர் வரவேற்றபோது இந்த முகத்தை அவர் அதிர்ச்சியுடன் நினைவு கூர வேண்டியதாயிற்று. அறிமுகத்துக்குப்பின், "என்னை உங்களுக்குத் தெரியவில்லையா?" என ஜெனரல் போர்த்தா வினவியபோது சர்ச்சில் அளித்த பதில் வருமாறு:—

"ஆம் கவசரயில் பதுங்கியிருந்து தாக்கப்பட்ட நாள் நினைவிலிருக்கிறது"

இதற்குப் பிறகு, சர்ச்சிலை அடிக்கடி ஜெனரல் போத்தா கண்டு பேசி வந்தார். முதல் உலகப் பெரும் போரின்போது சர்ச்சிலுடன் போத்தா ஒத்துழைத்து ஒத்தாசை புரிந்தார். (தொடரும்)

182043

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# சைதத்துப் படைப்போர் வசனகாவியம்

இது ஹஜ்ரத் அமீறுல் மூஃமினீன் அபூபக்கர் ஸித்தீக்றலியல்லாஹு அன்ஹு அவர்களின் குமாரர் அப்துல் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அமீர் சுபியான் என்னும் ஒரு அரசனோடு வெகு சாமார்த்தியத்துடன் யுத்தஞ் செய்து அவனுடைய மகளாகிய செய்தத்துவை கலியாணஞ் செய்து மதீனத்திற்கு வந்தது முதலிய விஷயங்கள் நிறம்பியுள்ள ஒரு அற்புதமான கிரந்தமாகும். இதை வாசிக்கவும் கேட்கவும் வெகு இன்பகரமா யிருக்கும். இதைப்பற்றி நிறம்பச் சொல்ல வேண்டியதில்லை. இதானது மலையாளம் குஞ்சு மூசாப்புலவர் அவர்களால் செய்துள்ள செய்யிதத்துப் படைப்போர் என்னும் காவியத்தையே வசன ரூபமாகச் செய்யப்பட்டது.

வசனம் விலை அணா. 12

ஷை பாடல் விலை அணா. 12

# ஸூறத்து யாஸீனும், துஆவும்

யாஸீன் ஸூராவுடைய அரபு ஆயத்துகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு திருத்தமாய் ஓதும்படியான அமைப்புகளுடையதாகும் இந்த கிதாபு. இதில் பெரிய துஆவும், பாத்திஹா ஓத வேண்டிய தர்த்தீபுகளும், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓதவேண்டிய துஆக்களும் தல்கீனும் அதன் தர்ஜுமாவும் அத்துடன் நாகூர் ஆண்டவர்கள் பேரில் அஸ்மாவுல் இலாமும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை அணா. 0–7–0

அறபு யாஸீன் விலை அணா. 0–1–6

அறபு யாஸீன் அஸ்மாஉல் இலாமுடன் விலை அணா. 0–2–0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட் திருவல்லிக்கேணி மதராஸ் 5.

# இஹ்யா உலூமுத்தீன் மொழி பெயர்ப்பு

## புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹுஜ்ஜத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப்படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞான மார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்து தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத் தத்துவ ஞானங்களையும், இக்கிதாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்ழு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்களெல்லாம் இந்நூலின் கண், மிகத்துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக் கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.

நெடுநாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆர்டர் முந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5—0—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

கெ. 20, மைன் ரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.